ஜுவல் லேண்ட் ஜுவலரி
வழங்கும்
அரியதோர் சந்தர்ப்பம்
உங்களுக்குப் பிடித்தமான தங்க நகைகளை வாங்கி மாதாந்த தவணை முறையில் பணம் செலுத்தலாம். முழு விபரங்களுக்கு இன்றே தொடர்பு கொள்ளவும்.
ஜுவல் லேண்ட் (பிரைவேட்) லிமிட்.
447, மருதானை ரோட், கொழும்பு-10
தொலைபேசி- 699326 — 685910

செய்தி இதழாக பதிவு பெற்றது
# தினபதி
ரூ 3/50
THE MOST INFLUENTIAL TAMIL DAILY IN SRI LANKA
DINAPATHI இல 6595 1990 மே 23 புதன்கிழமை ★ ★ ★ தினபதி

அசல் 22 கரட்
தங்க நகைகளுக்கு
நம்பிக்கையான
ஸ்தாபனம்
இன்றே விஜயம் செய்யுங்கள்
JEWEL LAND (pvt) LTD
No 447 Maradana Road. Colombo 10.
DEALERS IN JEWELLERY
தொலைபேசி- 699326 — 685910

# வடக்கு கிழக்கு ஆசிரியர் நியமனத்தில் முறைகேடு

## உடன் ரத்துசெய்ய உத்தரவு

### சி. ஐ. டி. பொலிஸ் விசாரணைக்கும் ஏற்பாடு

கொழும்பு, மே. 22

ஆரம்பப் பாடசாலை ஆசிரியர் திட்டத்தின் கீழ் வடக்கு கிழக்கில் 350க்கு மேற்பட்டவர்களுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கியதில் முறைகேடுகள் நடைபெற்றிருப்பது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அதனால் நியமனங்களை உடனே ரத்துச் செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. சி. ஐ. டி. பொலிஸ் விசாரணைக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

தகுதியானவர்கள் பலர் இருக்க, தகுதியற்றோருக்கு நியமனங்கள் வழங்கப்பட்டிருப்பதாக பல முறைப்பாடுகள் கிடைத்தன.

இது குறித்து கல்வி சேவைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகள் ஆராய்ந்தனர். முறைகேடான முறையில் நியமனங்கள் வழங்கப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த நியமனங்களை உடனடியாக ரத்துச் செய்யுமாறு கல்விச் சேவைகள் ஆணைக்குழு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்திருக்கிறது.

இந்த நியமனங்கள் குறித்து மேல் விசாரணைகளை நடத்துமாறு இரகசிய பொலிஸாரும் கேட்கப்பட்டுள்ளனர்.

இந்த ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டது தொடர்பான ஆவணங்களில் பல இப்போது கல்விச் சேவைகள் ஆணைக்குழுவில் இல்லை என்றும் அவை மாயமாக மறைந்து விட்டன என்றும் ஓர் அதிகாரி தெரிவித்தார். (உ-வ)

## டெங்கு காய்ச்சல்

### வேகமாக பரவுகிறது

கொழும்பு மே 22

நாட்டின் பல பாகங்களில் டெங்கு காய்ச்சல் மிக

சிறுவர்கள் கடந்த சில வாரங்களாக பொரளை சிறுவர் ஆஸ்பத்திரி வெளி நோயாளர் பிரி



தேசிய வீரர்கள் தினத்தைனாள் கல்வி அமைச்சர்

புலிகள்–அரசு பேச்சின் பயன்:

## இரு படை முகாம்கள் திருமலையில் அகன்றன

திருகோணமலை, மே 21

அரசுக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் இடையே தற்போது நடைபெற்று வரும் பேச்சுவார்த்தைகளின் பயனாக திருகோணமலை பிரதேசத்தில் இரண்டு இராணுவ முகாம்கள், அகற்றப்பட்டுள்ளன.

இவற்றில் ஒன்று நிரந்தர முகாமாக இருந்தது. அது திருகோணமலை நகரிலிருந்து 16 மைல் தொலைவில் பன்குளத்தில் அமைந்திருந்தது.

மற்றையது முகாம் ஒரு சோதனை முகாமாகும். அது பாலம்பட்டார் என்ற இடத்தில் அமைந்திருந்தது.

[ண—ற—287]

## அரசு—ஈ. பி. ஆர். எல். எப் அடுத்த சுற்றுப்பேச்சுக்கு

### திகதி, 26 இல் நிர்ணயிக்கப்படும்

கொழும்பு, மே 22

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிக்கும் (ஈ பி ஆர் எல் எப்) அரசுக்கும் இடையிலான அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தைக்கான திகதி இம்மாதம் 26 ஆம் திகதி அளவில் நிர்ணயிக்கப்படும்.

முன்னணியின் யாழ் மாவட்ட எம் பி திரு எஸ் பிரேமச்சந்திரன் இதனைத் தெரிவித்தார்.

கடந்த மார்ச் 1 ஆம் திகதி முன்னணியினர் தமிழீழ பிரகடனத்திற்கான முன்னறிவித்தல் கொடுத்ததை அடுத்து அரசுக்கும் முன்னணிக்கும் இடையே உறவுகள் துண்டிக்கப்பட்டிருந்தன.

பின்னர் கடந்த 15 ஆம் திகதி இரு தரப்பினருக்கும் இடையே

(2 ஆம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணத்தில்

## புலிகள்—அரசு மீண்டும் பேச்சு

யாழ்ப்பாணம், மே 21

விடுதலைப் புலிகளுக்கும், அரசுக்கும் இடையில் நேற்று மீண்டும் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகின.

யாழ் நகரில் பாதுகாப்பான ஓரிடத்திலேயே பேச்சுவார்த்தைகள் நடந்ததாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

வடக்கு, கிழக்கு மாகாண சமாதானக் குழுத் தலைவரும், நீதி அமைச்சருமான ஜனாப் ஏ

திரு யோகி யோகரத்தினம், மாத்தயா ஆகியோர் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டனர் என அறிவிக்கப்பட்டது.

(ண—ந—120)



கொழும்பு மே 22

நாட்டின் பல பாகங்களில் டெங்கு காய்ச்சல் மிக வேகமாக பரவி வருகிறது.

இந்நோயினால் பீடிக்கப்பட்ட சுமார் 600 பேர், பொரளை, அனுராதபுரம, சிலாபம, குருநாகல், புத்தளம ஆகிய ஆஸ்பத்திரிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கொழும்பிலும் அதன் சுற்றுப் புற பகுதிகளிலும் டெங்குக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட ஆயிரத்துக்கும அதிகமான சிறுவர்கள் கடந்த சில வாரங்களாக பொரளை சிறுவர் ஆஸ்பத்திரி வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

மேலும 202 சிறுவர்கள் ஆஸ்பத்திரியில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்தப் பயங்கர நோயை கட்டுப் படுத்துவதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளையும மேற்கொள்ளுமாறு தேசிய சுகாதார அபிவிருத்தி சபையின் தலைவரும பிரதமருமான திரு டி பி விஜேதுங்க, சுகாதார அமைச்சையும சுதேச வைத்தியத்துறை அமைச்சையும கேட்டிருக்கிறார்.

கடந்த இரு வருடங்களுக்கு முன்னர் அனுராதபுரம பகுதியில் இந்நோயினால் சுமார் 200 பேர் மரணமானார்கள்.

(ண—வ)

## 10 பொலிஸார் கடத்தப்பட்டு பின்னர் விடுதலை

கொழும்பு மே 22

அம்பாறை மாவட்டத்தின் திகவாப்பியில் பத்து பொலிஸார் நேற்று முன்தினம கடத்தப்பட்டனர். இரண்டு மணித்தியால விசாரணையின் பின்னர் இவர்கள் விடுதலை

(2 ஆம பக்கம பார்க்க)

## கல்முனைக்குடி: ஒருவர் சுட்டுக் கொலை

அக்கரைப்பற்று, மே 21

கல்முனைக்குடியைச் சேர்ந்த உதுமாலெப்பை ஆதம பாவா என்பவர் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டார். இவருக்கு வயது 48.

நேற்று முன்தினம் இரவு இவரது வீட்டில் நுழைந்த ஒரு கோஷ்

(2 ஆம பக்கம பார்க்க)

## சோமண்ணை



எங்கட ரயில்வேயும சாதனை புரியும பாருங்கோ, ஆமை வேகத்தில!

தார். (உ—வ)

## படகு விபத்தில் 61 பேர் மரணம்

ஜகார்த்தா, மே 22

இந்தோனேஷியாவில் நிகழ்ந்த படகு விபத்து ஒன்றில் 61 பேர் நீரில் மூழ்கி மரணமானார்கள்.

போர்னியோ என்னும இடத்திலிருந்து சற்றுத் தொலைவில் உள்ள களிமண்டான் என்னும பகுதியில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இந்த விபத்து சம்பவித்தது.

அளவுக்கதிகமாக 200 பயணிகள் படகிலிருந்ததால் சஹாயா மக்கோலி என்ற படகு கவிழ்ந்தது. 141 பேர் காப்பாற்றப்பட்டனர்.

(ண—எ)



தேசிய வீரர்கள் தினத்தையொட்டி கல்வி அமைச்சர் திரு ஆர் பிரேமதாச நேற்று முன் முன்னிட்டு ஜனாதிபதி அல்ஹாஜ் பதியுத்தின் மஹ்மூத்துக்கு தேசமான்ய விருதும கலாநிதி ஆ கந்தையாவுக்கு கலாகீர்த்தி விருதும வழங்கி இருவரையும கௌரவித்த போது எடுத்த படங்களை [illegible] காணலாம். ஜனாதிபதி செயலகத்தில் மேலும 45 பேர் இப்படி வெவ்வேறு விருதுகள் வழங்கி ஜனாதிபதியால் கௌரவிக்கப்பட்டனர்.

[படங்கள்— அனுரா குணசேகரா] (உ)

## வடக்கு, கிழக்கு ரயில் நேற்றிரவு மீண்டும் ஆரம்பம்

கொழும்பு, மே 22

வடக்கு கிழக்கு பகுதிகளுக்கான ரயில் சேவைகள் நேற்று செவ்வாய்க்கிழமை இரவு மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன.

ரயில் கட்டுப்பாட்டு நிலைய அதிகாரிகள் இதனைத் தெரிவித்தனர்.

கடந்த திங்கட்கிழமை வடக்கு

(2 ஆம பக்கம பார்க்க)

வடக்கு, கிழக்கு மாகாண சமாதானக் குழுத் தலைவரும, நீதி அமைச்சருமான ஜனாப் ஏ ஸி எஸ் ஹமீது நேற்று முற்பகல் 10-30 மணிக்கு பலாலி விமான நிலையம வந்தடைந்தார்.

அவரை விடுதலைப் புலிகள் பாதுகாப்பான இடத்திற்கு அழைத்துச் சென்று பேச்சுவார்த்தைகளை நடத்தினர்.


விடுதலைப் புலிகள் சார்பில் டாக்டர் அன்டன் பாலசிங்கம,

## நாடாளுமன்றம் இன்று கூடும்

கொழும்பு, மே 22

நாடாளுமன்றம இன்று புதன்கிழமை காலை 9-00 மணிக்கு கூடும.

(ண—வ)



## அசுர வேக ரயில்

பிரான்ஸில் அதிவேக ரயில் ஒன்று உலக சாதனை ஒன்றைப் புரிந்திருக்கிறது. மணிக்கு 513-3 கிலோ மீட்டர் வேகத்தில் ஓடி அது இச்சாதனையை ஏற்படுத்தியிருக்கிறது. இச்சாதனை மேற்கு பிரான்ஸில் கடந்த வெள்ளிக்கிழமை நிகழ்த்தப்பட்டிருக்கிறது. மேற்கு ஐரோப்பிய நாடுகளின் அதி விசேஷமான தண்டவாளத்தில் ஓடும ரயில்களின் சாதாரண வேகம மணிக்கு 300 கிலோ மீட்டராகும. இலங்கையில் சாதாரணமாக ரயில்களின் வேகம மணிக்கு 35 கிலோ மீட்டராகும.

(ண)

# மலையக மக்களுக்காக வடக்கு கிழக்கில் ஹர்த்தால் நடத்திய புலிகளுக்கு பாராட்டு

## தொழிற்சங்க கூட்டுக் கமிட்டி

கொழும்பு, மே 22

இந்திய வம்சாவளி மக்களை நாடு கடத்தும அரசின் நோக்கத்திற்கு எதிராக விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி வடக்கு கிழக்குப் பகுதிகளில் கடந்த திங்கட்கிழமை நடத்திய ஹர்த்தாலை வரவேற்கிறோம புலிகளைப் பாராட்டுகிறோம.

மலையக தொழிற் சங்கக் கூட்டுக் கமிட்டிக்கும, விடுதலைப் புலிகளுக்கும இடையில் தொடர்புகள் இல்லை. என்றாலும அவர்கள் மலையக மக்கள் மீது கொண்டிருக்கும ஆர்வத்தை நாம மதிக்கிறோம.

ஐக்கிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலைவரும, மலையக தொழிற் சங்கக் கூட்டுக் கமிட்டியின் அமைப்பாளருமான திரு எஸ் நடேசன் இப்படி கூறினார்.

நேற்றுக் காலை கொழும்பு கலக்ஸி ஹோட்டலில் மலையக தொழிற் சங்கக் கூட்டுக் கமிட்டி "தாயகம திரும்புவோர்" நிலையினை விளக்க பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடத்தியது.

உள்ளூர் மற்றும வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் பலரும இம மாநாட்டில் கலந்து கொண்டனர்.

கூட்டு கமிட்டியில் அங்கம வகிக்கும தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளும இம்மாநாட்டில் கலந்து கொண்டனர்.

தாயகம திரும்புவோர் நிலையினை மனிதாபிமான ரீதியில் தீர்த்து வைக்க வேண்டும என்று

(2 ஆம பக்கம பார்க்க)

ஆணித்தரமான அரசியல் செய்திகளையும் துணிச்சலான கருத்துரைகளையும் தருவது தினபதி

பல்வேறு தொழில் துறைகளில்

# கூட்டு முயற்சிகளுக்கு

# கொரியா இணக்கம்

## இல. ஏற்றுமதி பொருட்களை

### அங்கு பிரபலப்படுத்தவும் முடிவு

கொழும்பு மே 22

பல்வேறு தொழில்துறைகளில் கூட்டாக ஈடுபட இலங்கையும் கொரியாவும் இணக்கம் கண்டுள்ளன.

கடந்த 15ஆம் திகதி தென் கொரியாவின் சோல் நகரில் இடம்பெற்ற கொரிய -இலங்கை பொருளாதார கூட்டுறவு குழுக் கூட்டத்திலேயே இவ்வாறு இணக்கம் காணப்பட்டது.

மீன் பொருள்கள், புடைவைக் கைத்தொழில், தோல் பொருள் உற்பத்தி, ஆபரண மற்றும் வைரம பட்டை தீட்டும துறை, றப்பர் மற்றும் தெங்குத் துறை உட்பட பல்வேறு தொழில்துறைகளில் இரு நாடுகளும் கூட்டிணைந்து பணியாற்ற முடியும் என்றும இவை தொடர்பான சாத்தியங்கள் பற்றி ஆராயப்பட வேண்டுமென்றும இக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

இலங்கை - கொரிய கூட்டுறவுடன் உல்லாசப் பயணத்துறையில் மேற்கொள்ளப்படும வர்த்தக முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதென்றும இங்கு தீர்மானிக்கப்பட்டது.

இரு நாடுகளையும் சேர்ந்த அறுபதுக்கும் அதிகமான வர்த்தக பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இலங்கையின் தீர்வையற்ற வர்த்தக வலயத்தில் கொரிய வர்த்தகர்கள் முதலீடு செய்வது தொடர்பான சாதக சூழ்நிலைகள் பற்றி இலங்கை தூதுக்குழுவினர் அங்கு எடுத்துக் கூறினர்.

கொரிய அரசாங்கம இறக்குமதித்துறையில் சில கட்டுப்பாடுகளைத் தளர்த்தியிருப்பதை இலங்கை வர்த்தகப் பிரதிநிதிகளுக்கு கொரிய தூதுக்குழு சுட்டிக்காட்டியது. அவ்வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுமபடியும அறிவுறுத்தியது.

இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்கள் பற்றி கொரிய மக்கள் இன்மை அறியாதுள்ளனர். அகவே இலங்கையின் உற்பத்திப் பொருட்கள் அங்கு பிரபலப்படுத்தப்பட வேண்டும என்றும கொரிய தரப்பினர் எடுத்துரைத்தனர்.

அடுத்த கூட்டுப் பொருளாதாரக் குழுக் கூட்டத்தை இலங்கையில் எதிர்வரும ஆண்டு நடத்துவதெனவும முடிவு செய்யப்பட்டது. (ந—032)

## தொண்டமான் 26 இல் பதுளை விஜயம்

பதுளை, மே 21

சுற்றுலாத்துறை மற்றும கிராமத் தொழிற்துறை அபிவிருத்தி அமைச்சரும, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவருமான திரு எஸ் தொண்டமான் எதிர்வரும் 26 ஆம திகதி பதுளைக்கு விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பதுளை மாவட்ட தோட்ட கமிட்டிக் தலைவர்கள் மாவட்ட தலைவர்கள், மாதர் சங்கத் தலைவர்கள் கொண்ட கூட்டமொன்றில் அவர் கலந்து கொள்வார்.

மற்றுமொரு கூட்டம மறுநாள் 27 ஆம திகதி அப்புத்தளையில் இடமபெறும. (ந—037)



தேசிய வீரர்கள் தினத்தை யொட்டி நேற்று பிற்பகல் 2-30 மணிக்கு தேசிய படிகள் திணைக்கள முன்றலில் இருந்து சுதந்திர சதுக்கம் வரை ஊர்வலம ஒன்று நடத்தப்பட்ட போது பிடிக்கப்பட்ட படம. இத்தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாச ஜனாதிபதி செயலகத்தில் வைத்து 47 பேருக்கு தேசிய விருதுகளை வழங்கினார். தபால் திணைக்களம மறுண பிதா டி எம எப் லோங், பேராசிரியர் எம டி ரத்னசூரிய, டி பீ ஏ விஜேரத்ன எல் டி பீ மஞ்சுசிறி ஆகியோருக்கு நினைவு முத்திரைகளை வெளியிட்டது. (ண—ந)

## மலையக மக்...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

கேட்டு, கூட்டுக் கமிட்டி நீண்டதொரு மகஜரை ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாசவுக்கு அனுப்பி வைத்திருக்கிறது.

அந்த மகஜரில் கூட்டுக் கமிட்டி விடுத்திருக்கும கோரிக்கை தொடர்பாக திரு நடேசன் பத்திரிகையாளருக்கு விவரித்தார்.

அவர் கூறியதாவது:-

* சர்வ தேச மனித உரிமை சாசனத்தின் 15 (2) சரத்தின் படி, ஒரு நபருக்குரிய தேசிய உரிமையை யாரும மறுக்க முடியாது. அதேவேளை ஒரு நாட்டுப் பிரஜாவுரிமையை கைவிட்டு, இன்னொரு நாட்டின் பிரஜையாக மாறுவதற்கு இருக்கும உரிமையையும மறுக்க முடியாது.

எனினும முன்னர் இலங்கை இந்திய அரசுகள் செய்து கொண்ட ஒப்பந்தங்களின்படி பிரஜாவுரிமை கோரி வரும விண்ணப்பத்தை ஏற்கவோ, நிராகரிக்கவோ சமபந்தப்பட்ட அமைச்சருக்கு அதிகாரம அளிக்கப்பட்டிருந்தது. அவரின் முடிவை எதிர்த்து நீதி மன்றம கூட செல்ல முடியாது.

இது மிகவும அநீதியானது. எனவே இந்த பிரச்சினையை ஜனாதிபதி மனிதாபிமான ரீதியில் தீர்த்து வைக்க வேண்டும.

* இந்திய பிரஜாவுரிமைக்கு விண்ணப்பித்திருந்தாலும இந்திய கடவுச் சீட்டுகளைப் பெற்றிருந்தாலும சமபந்தப்பட்டவர்கள் தற்போது இலங்கை பிரஜாவுரிமை கோரும பட்சத்தில் அவர்களுக்கு இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கப்பட வேண்டும.
* இந்தியா செல்ல விருமபுபவர்களை கௌரவமாக அனுப்பி வைப்பதற்கு வழிவகை செய்யப்பட வேண்டும.

ஸ்ரீமா சாஸ்திரி ஒப்பந்தம ஏற்பட்டு 26 வருடங்களாகி விட்டன. விண்ணப்பங்கள் செய்த போது இவர்களில் பெருமபாலானோர் சிறு பிள்ளைகள் பெற்றோர்கள் எடுத்த தீர்மானத்தில் இவர்களுக்கு எவ்வித பங்கும இல்லை.

இந்திய பிரஜா உரிமைக்கு விண்ணப்பித்த பெற்றோர்களில் பெருமபாலானோர் இப்போது உயிருடன் இல்லை.

பெருமபாலான தோட்ட மக்கள் பரமபரை, பரமபரையாக இந்த நாட்டிலேயே வாழ்ந்து வருகின்றனர். இந்த நாட்டிலேயே தொடர்ந்து வாழ விருமபுகின்றனர்.

இந்தியா அவர்களுக்கு அந்நிய நாடு. தமிழ் நாட்டில் வாழும மக்களுக்கும, இவர்களுக்கும மொழி ஒருமைப்பாட்டைத் தவிர வேறு எந்தப் பந்தமும கிடையாது.

அப்படிப்பட்டவர்களை வலுக்கட்டாயமாக இந்தியாவுக்கு அனுப்புவதா?

இப்படி திரு நடேசன் கூட்டுக் கமிட்டியின் சார்பில் தெரிவித்தார்.

திரு ஏ முத்துலிங்கம, திரு இரா சந்திரமோகன், டாக்டர் சுனில் ரத்னபிரிய, திரு வி எல் பெரைரா, திரு மைக்கல் ஜோசப், திரு பெ முத்துலிங்கம, திரு ஆர் எஸ் சண்முகம ஆகியோர் கூட்டுக் கமிட்டியின் சார்பில் மாநாட்டில் கலந்து கொண்டனர். (உ—ந—கு)

## அரசு—ஈ.பி...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

ஆரமபப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன.

முன்னணியினர் கடந்த பெப்ரவரி மாதம் சமர்ப்பித்த 19 அம்சக் கோரிக்கைகளை சர்வகட்சி மாநாட்டின் போது ஆராய்வதென அரசு அப்போது இணக்கம தெரிவித்தது.

அடுக்க சுற்றுப் பேச்சுவார்த்தைக்கு அன்று திகதி நிர்ணயிக்கப்படவில்லை.

அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தைக்கு முன்னர் முன்னணியினர் ஜனாதிபதியுடன் கலந்துரையாட உத்தேசித்துள்ளனர்.

இதற்காக நேரத்தை ஒதுக்கித் தருமாறு தாம் ஜனாதிபதியிடம கேட்டிருப்பதாகவும் 26 ஆம திகதி அளவில் ஜனாதிபதியை சந்திக்கலாம் என தாம நமபுவதாகவும் திரு பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

அந்த சந்திப்பின் போது அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தைக்கான திகதியும் நிர்ணயிக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

# இன்றைய திரைகளில்

இப்பொழுது காட்சியளிக்கிறது

முருகன் (ஜிந்துப்பிட்டி)
2-15, 6-15, 9-15
சனி/ஞாயிறு 10-15

ஈரோஸ் (பாமன்கடை)
2-30, 6-00, 9-30
சனி/ஞாயிறு 10-30

சுபராஜ் (மட்டக்களப்பு)
25 ஆம் திகதி முதல்

பயங்கர சண்டை காட்சிகள் இனிமையான பாடல்கள் நிறைந்த சித்திரம
அர்ஜுன் — சசிகலா

## தலையற்ற முண்டம் மீனவர் மீட்டனர்

## வடக்கு கிழக்கில்

## பெரியாஸ்பத்திரி: கண் சிகிச்சை

## ரந்தெனிகல நீர்த் தேக்கம்: ஜனாதிபதி 26 இல் திறந்துவைப்பார்

தெல்தெனிய, மே 21

எதிர்வரும 26 ஆம திகதி ஜனாதிபதி திரு ஆர் பிரேம

நிறைந்த சித்திரம
அர்ஜுன் — சசிகலா
சீதா — செந்தில்
பேபி ஷாலினி — சரத்பாபு
நடித்த

**சங்கர் குரு**

(கலர்)

6 வது வாரம
மஜஸ்டிமா
[கிராண்ட்பாஸ்]
2-00, 6-00, 9-30
கொன்கோட்
தெஹிவளை
10-30, 2-00, 6-00, 9-00
வின்சர்
[யாழ்நகர்]
10-30, 2-30, 6-00

பாக்யராஜ் — ஷோபனா
சோமயாஜுலு — மனோரமா
குமரிமுத்து நடித்த

**இது நம்ம ஆளு**

[கலர்]

7 வது வாரம
சமந்தா
(தெமட்டகொடை)
10-00, 2-00, 6-00, 9-30
பிரின்ஸ்
(ஹட்டன்)
2-30, 6-00
சனி/ஞாயிறு 10-30
ஸ்ரீதர்
(யாழ்நகர்)
10-30, 2-30, 6-30

ரஜனிகாந்த் — ராதிகா
நடித்த
சத்யா மூவிஸ்

**ஊர்க்காவலன்**

(கலர்)

## மீனவர் மீட்டனர்

கொழும்பு, மே 22

மீனவர்கள் வெலிகமை, மிரிஸ்ஸ கடலில் தலையற்ற முண்டம ஒன்றைக் கண்டெடுத்தனர்-

இந்த முண்டத்தை மீன்கள் சாப்பிட்டுக் கொண்டிருந்ததாகவும மீனவர்கள் பொலீஸாரிடம் தெரிவித்தனர்-

இந்த முண்டம யாருடையது என இதுவரை அடையாளம காணப்படவில்லை-

இதேவேளை, சில தினங்களுக்கு முன்னர் வெலிகமை பகுதியில் மரக்கிளை ஒன்றில் தொங்கிய தலை ஒன்றையும வெலிகம பொலீஸார் கண்டெடுத்தார்கள் என்பது நினைவிருக்கலாம-

(ண-வ)

## கல்முனைக்குடி...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

டியினரே இவரைச் சுட்டுக் கொன்றனர் எனக் கூறப்படுகிறது-

இவர் நெல் ஆலை ஒன்றின் உரிமையாளராவார்-

இதேவேளை அக்கரைப்பற்று பொலீஸ் பிரிவைச் சேர்ந்த பாலமுனை பகுதியில் ஐந்து வீடுகளிலிருந்து சுமார் 30 ஆயிரம ரூபா பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது-

நேற்று முன்தினம் இரவு இப்பகுதி வீடுகளில் நுழைந்த சுமார் 20 பேரடங்கிய கோஷ்டியினர் வீட்டாரை துப்பாக்கி முனையில் பயமுறுத்தி இந்தக் கொள்ளையை நடத்தினர்-

[ண—வ—035]

## 10 பொலீஸார்...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டனர்.

மேற்படி கிராமத்தில் இடம பெற்ற ஒரு மரணம தொடர்பாக விசாரணை நடத்தும பொருட்டு சென்ற பொலீஸாரே கடத்தப்பட்டனர். கடத்தப்பட்ட பொலீஸார் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

பின்னர் இராணுவ அதிகாரிகள் தலையீட்டையடுத்து பொலீஸார் விடுதலை செய்யப்பட்டனர்.

(உ-032)

## வடக்கு கிழக்கில் மீண்டும் சகஜநிலை

கொழும்பு, மே 22

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் நேற்று மீண்டும சகஜ நிலை காணப்பட்டது-

ஹர்த்தாலுக்காக நேற்று முன்தினம மூடப்பட்டு இருந்த கடைகள் நேற்று திறக்கப்பட்டு இருந்தன-

ஆயினும தேசிய வீரர்கள் தின விடுமுறை காரணமாக அரச அலுவல்கள் மற்றும வங்கிகள் தொடர்ந்தும மூடப்பட்டுக் கிடந்தன-

மக்கள் நடமாட்டம வழமை போல் காணப்பட்டது-

பஸ் போக்குவரத்து சாதாரண விடுமுறை நாட்களில் போல் நடைபெற்றன-

கொழும்பிலிருந்து வடக்கு, கிழக்கிற்கான ரயில் சேவைகள் நேற்று இரவே ஆரமபிக்கப்பட்டன-

(ண-ற)

## சுற்றுலா சென்ற யுவதி குளத்தில் மூழ்கி மரணம்

கொழும்பு, மே 22

குளத்தில் குளிக்கச் சென்ற யுவதிகள் மூவரில் ஒருவர் நீரில் மூழ்கி மரணமானார்-

ஏனைய இருவரும ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்-

இச்சமபவம அனுராதபுரம திஸாவெவ குளத்தில் நேற்று முன்தினம மாலை நிகழ்ந்தது-

இரத்மலானை மலிபன் பிஸ்கட் நிறுவனத்தில் கடமை புரியும ஊழியர்கள் அனுராதபுரத்துக்கு யாத்திரை ஒன்றை மேற்கொண்டனர்-

இவர்கள் குளத்தில் குளிக்கச் சென்ற போதே ஒருவர் மரணமானார்- சோமலதா (வயது 23) என்பவரே இவ்வாறு மரணமானவராவார்-

வினிதா, ஐராங்கனி ஆகிய இரு யுவதிகளும அனுராதபுரம ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர்-

(ண-வ)

## குமணையில் புலிகளே யானைகளை கொன்றனராம்

### அரசாங்கம் அறிக்கை

கொழும்பு மே 22

குமணைக் காட்டில் 16 யானைகளை விடுதலைப் புலிகளே கொன்றனர் என்று நேற்று அரசு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மரங்களை வெட்டியவர்களை யானைகளிடமிருந்து பாதுகாப்பதற்காகவே யானைகள் கொல்லப்பட்டன, என்ம அறிக்கை கூறுகிறது.

மரங்களை வெட்டிச் செல்வதற்கு ஏறத்தாள 200 மாட்டு வண்டிகள் பயன்படுத்தப்படுவதாகவும.

பொடியன் என்பவர் கொழும்பிலிருந்து குமணைக்கு 3 புல்டோசர்களைக் கொண்டு வந்திருப்பதாகவும அந்த அறிக்கையில் மேலும குறிப்பிடப்பட்டிருக்கிறது.

எருமைகளும, மான்களும கூடக் கொல்லப்படுகின்றன. அவற்றின் இறைச்சி லொறிகள் மூலம திருக்கோயில் பகுதிக்கு எடுத்துச் செல்லப்படுகிறது என்றும அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(உ-ங-நு)

## வடக்கு கிழக்கு...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

கிழக்கு பகுதிகளில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது தெரிந்ததே.

எனவேதான் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, மற்றும் தலைமன்னார் ஆகிய இடங்களுக்கான ரயில் சேவைகள் ரத்துச் செய்யப்பட்டன.

வட பகுதிக்கான ரயில் சேவைகள் அனுராதபுரம் வரையிலும், கிழக்கு ரயில் சேவை பொலன்னறுவை வரையிலும் மட்டுமே நடைபெற்றன.

வடக்கு கிழக்கு பகுதிகளில் நேற்று சகஜ நிலைமை ஏற்பட்டதால் ரயில் சேவைகள் மீண்டும வழமை போல் ஆரமபிக்கப்பட்டன என்று மேற்படி அதிகாரி தெரிவித்தார்-

[ண—ற]

## கண் சிகிச்சை முகாம் 27 இல்

கொழும்பு, மே 22

எதிர்வரும 27 ஆம திகதி கொழும்பு பெரியாஸ்பத்திரியில் இலவச கண்சிகிச்சை முகாமொன்று நடைபெறும-

மத்திய கொழும்பு லயன்ஸ் சங்கம இக் கண் சிகிச்சை முகாமை ஒழுங்கு செய்துள்ளது-

(ந-032)

தெல்தெனிய, மே 21

எதிர்வரும 26 ஆம திகதி ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாசா ரந்தெனிகல நீர்த்தேக்கத் திட்டத்தை ஆரமபித்து வைப்பார்-

இதனை முன்னிட்டு நடைபெறவிருக்கும முஸ்லிம மத வைபவத்தில் கண்டி மீராமக்காம தர்ஹா பிரதம இமாம அல்ஹாஜ் மௌலவி ஐ எல் எம இப்றாஹிம (பலாஹி) கலந்து கொள்ளவுள்ளார்-

(ந-289)

**ஹஜ் யாத்திரை 1990**

மக்காவில் ஹரம் ஷரீபுக்கு அருகில் (சுமார் 50 மீட்டரில்) புதிய கட்டடத்தில் லிப்ட் வசதிகளுடன் பல்வேறு அளவுகளில் அறைகள் உள்ளன. (ஒவ்வொன்றிலும் 5 முதல் 7 வரை யாத்திரிகர்கள் இருக்கலாம்)

இணைப்பு குளியல் அறை/மலசலகூட வசதிகள் (எடேச் பாத்ரூம்)

உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.
தொலைபேசி 24382 கொழும்பு
435322 கொழும்பு

மேலதிக விபரங்களுக்கு
தொடர்பு கொள்க-

**ஹாஜி அகமட் நிஜார்**
66 விவேகானந்த மேடு
கொழும்பு—13

தமிழ்ப் பட உலகில்

# படிப்படியாக உயர்ந்து வரும் இயக்குநர் அனுமோகன்

எடுத்த எடுப்பிலேயே இயக்குநர் என்ற முத்திரை குத்தப்பட்டு வருவோரே இன்று தமிழ் திரை உலகில் பலர்.

நாடகங்கள் எழுதி நடித்து, பின்பு தங்கள் தகுதியின் அடிப்படையில் துணை டைரக்டராக அடுத்து அசோசியேட் டைரக்டராக பல ஆண்டுகள் பணியாற்றி அதன் பின்பே அனுபவம் மூலமாக டைரக்ஷன் பொறுப்பு ஏற்பவர் ஒரு சிலரே! அந்த ஒரு சிலரில் குறிப்பிடத்தக்கவர் அனுமோகன்.

"அம்மன் கோவில் கிழக்காலே", "வைதேகி காத்திருந்தாள்", "பயணங்கள் முடிவதில்லை" ஆகிய படங்கள் பெரும் வெற்றி ஈட்டியதற்கு அனுமோகன் போன்ற மதி நுட்பம் உள்ளவர்கள் பின்னணியில் இருந்து உழைத்த உழைப்பும் முக்கிய காரணமாகும்.

"அந்த ராத்திரிக்கு சாட்சி இல்லை". "மெல்லத் திறந்தது கதவு" ஆகிய படங்களின் அசோசியேட் டைரக்டர் அனுமோகன் நாடக ஆசிரியராக, நடிகராக கலைப் பயணம் தொடங்கினன்ற மோகன் – அமலா – ராதா நடித்த திரைக்கு வந்த "இது ஒரு தொடர்கதை" பிரபு–ராதிகா நடித்த "நினைவுச் சின்னம்" ஆகிய படங்களின் கதை திரைக்கதை வசனம் எழுதி டைரக்ட் செய்தவர் அனுமோகன்.

இவரது டைரக்ஷனில் தற்போது தயாராகி வரும் படம், ராமகி – ரஞ்சனி நடிக்கும் "கல்யாணம் பண்ணிப்பார்"

"நினைவுச் சின்னம்" படத்தை இவருடைய நண்பர் சக்கரவர்த்தியுடன் சேர்ந்து தயாரித்ததுடன் மேலும் சொந்த தயாரிப்பில் முழு மூச்சுடன் ஈடுபட்டுள்ள அனுமோகனை சந்தித்து உரையாடினார் எமது நிருபர்.

இன்றைய அழகான இளம் நடிகர்களுக்கு இணையான அழகு தோற்றம் உள்ள அனுமோகன் கூறியதாவது:–

சிறு வயது நாடக பயிற்சிதான் கைகொடுத்தது. அதன் மூலமே திரைப்பட துறைக்கு வந்தவன் நான்.

சிறந்த திரைப்படம் உருவாவதற்கு முதலில் தேவை கதை என்றால் அதைவிட முக்கிய தேவை கதைக்கு ஏற்ப காட்சிகளை அமைத்து உருவாக்கி திரையிடத் தகுந்த பட அதிபர் தகுந்த பட அதிபர் இருந்



அனுமோகன்

தால் தான் ஒரு டைரக்டர் தனது எண்ணங்களுக்கு ஆசைகளுக்கு முழு வடிவம் கொடுத்து டைரக்ட் செய்ய முடியும்.

என்னைப் பொறுத்தவரை கதை அமசத்தில் காதலுக்கு முதலிடம் அளிக்கிறேன்.

காதல் என்றால் கட்டித் தழுவுவது, கன்னத்தை உதடுகளால் பழுக்க வைப்பததான் காதல் அல்ல. ஆடைக் குறைப்பும "கவர்ச்சி" அல்ல.

அன்பு, பாசம அழகை ரசிக்கும தன்மையையும காதலாக எடுத்துக் கொண்டு எனது படத்துக்கான கதை திரைக்கதை வசனத்தை அமைக்கிறேன்.

பயங்கர சண்டை, ரத்தம சிந்துதல் கண்டிப்பாக இருந்தே தீர வேண்டும என்பது அல்ல. இவைகளை விட மென்மையான காதலை ரசிப்போரே அதிகம. இவைகளுடன் காமெடியும கலந்து கையாளுகிறேன்.

குறிப்பிட்ட செலவுக்குள் ஒரு படத்தை தயாரித்து விடலாம என்று முன் கூட்டியே திட்டமிடலாம. ஆனால் திட்டமிடுவது போல் படத்தை தயாரிப்பது சுலபம அல்ல–


டைரக்ஷன் துறையில் எனது முன்னோடிகளாக பி ஆர் பந்துலு, ஸ்ரீதர் கே எஸ் கோபாலகிருஷ்ணன் கே பாலச்சந்தர் ஆகியோரை கருதுகிறேன். ஏனென்றால் இவர்கள் படங்களில் உண்மையான காதல் உணர்வுகள் அதிகம இருக்கும.

எம ஜி ஆர், சிவாஜி நடித்த படங்களை பார்த்து பார்த்து தான் எனது கலை ஆர்வத்தை வளர்த்து வந்தேன்.

இன்றைய பட உலக தயாரிப்பு டைரக்ஷன் என்பதெல்லாம சூதாட்டம போன்றது தான்.

யாருக்கு எப்போது எந்தப் பக்கம வெற்றி கிட்டும என்பதை சொல்ல முடியாது!

இவ்வாறு கூறினார் அனுமோகன். (ந–10)



"காதலை பரிமாறிக் கொள்ள வசதியான இடம அங்கே இருக்கு. வா போகலாம" என்று திலீப்பை அழைக்கிறார் பல்லவி. (படம: "பெண்கள் வீட்டின் கண்கள்") (ந–10)

# மா. சபை மட்டத்தில் பெ. வெங்காய செய்கை

## இறக்குமதியைக் குறைக்க

### விவசாய அமைச்சு நடவடிக்கை

கொழும்பு மே 22

பெரிய வெங்காய செய்கையை மாகாண சபை மட்டத்தில் மேற்கொள்ள விவசாய, விவசாய அபிவிருத்தி அமைச்சு முடிவு செய்துள்ளது.

வருடாந்தம சுமார் 35 ஆயிரம தொன் பெரிய வெங்காயம நாட்டு மக்களின் பாவனைக்கு தேவைப்படுவதாக அரசாங்கம நடத்திய மதிப்பீடு ஒன்றில் இருந்து தெரியவந்துள்ளது

உள்நாட்டில் வருடாந்தம 6000 தொன் பெரிய வெங்காயமே உற்பத்தி செய்யப்படுகிறது. மிகுதி 29 ஆயிரம தொன் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகிறது–

இதனாலேயே பெரிய வெங்காய செய்கையை மாகாண சபை மட்டத்தில் பாரிய அளவில் மேற்கொள்ள விவசாய, விவசாய அபிவிருத்தி அமைச்சு முடிவு செய்திருக்கிறது.

இதற்குத் தேவையான விதை வெங்காயத்தை அரசாங்கம வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யவிருக்கிறது–

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம ஒரு கிலோ பெரிய வெங்காயத்தை தற்போது 17 ரூபா 50 சதத்திற்கு விற்பனை செய்கிறது.

ஆனால் தனியார்துறையினர் ஒரு கிலோ பெரிய வெங்காயத்தை 75 ரூபாவிற்கு விற்பனை செய்கின்றனர்– (ந—ர)

எரிபொருளை சேமிக்கும்

## புதிய விறகு அடுப்பு கண்டுபிடிப்பு

### மின்சார சபை சந்தைப்படுத்தும்

கொழும்பு மே 22

எரிபொருளை சேமிக்கும வகையிலான புதிய விறகு அடுப்பு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது–

எரிசக்தி அமைச்சு அதிகாரிகள் இத்தகவலை வெளியிட்டனர்–

"அனகி ஸ்டவ்" என்பது இதன் பெயராகும–

சர்வோதய இயக்கமும இலங்கை விஞ்ஞான கைத்தொழில் ஆராய்ச்சி நிலையமும இணைந்து கண்டுபிடித்துள்ள இந்த அடுப்பை இலங்கை மின்சார சபை சந்தைப்படுத்தும–

"சக்தியை பராமரிப்பது" தொடர்பாக எரிசக்தி மின்சக்தி அமைச்சர் திரு சரத் சந்திரா ராஜகருணா இலங்கை மின்சார சபை அலுவலகத்தில் கடந்த வாரம பத்திரிகை மாநாடு ஒன்றை நடத்தினார்–

நாடளாவிய ரீதியில் எரிபொருள் பராமரிப்புப் பற்றி தேசிய ரீதியில் பிரசாரம மேற்கொள்வது பற்றி இந்த மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது–

இதன் அங்குரார்ப்பணக் கூட்டம இன்று 22 ஆம ... விளக்கக் கூட்டம மினுவாங்கொடையில் இம்மாதம 29 ஆம திகதி நடக்கும–

இப்படி திரு குணவர்த்தன கூறினார்–

இலங்கை மின்சார சபை பிரதி முகாமையாளர் பி பி சேபாலகே எரிசக்தி மின்சக்தி அமைச்சு செயலாளர் அமரதாச குணவர்த்தன எரிசக்தி மின்சக்தி ராஜாங்க அமைச்சர் மேர்வின் ஜே குரே இலங்கை மின்சார சபை உதவி முகாமையாளர் டி ஜி சேனாதிபதி ஆகியோரும பத்திரிகை மாநாட்டில் பங்குபற்றினர்– [ந—சூ]

## வடக்கு, கிழக்கு தவிர்ந்த மாகாணங்கள்:

## மறுவாழ்வு நடவடிக்கை

### விவர அறிக்கை இன்றி தாமதம்

— ஏ. எம். எஸ். அதிகாரி

கொழும்பு மே 22

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த மற்றைய மாகாணங்களில் மறுவாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தேவையான விவர அறிக்கைகள் இன்னும கிடைக்கவில்லை. இதனால் இப்பணிகள் தாமதமாகின்றன.

மறுவாழ்வு, சமூக சேமநல அமைச்சர் திரு ஏ எம எஸ் அதிகாரி இதனைத் தெரிவித்தார்.

இந்த விவரங்களைப் பெறுவதற்காக அரச அதிகாரிகளை சந்திப்பதற்கு அமைச்சர் அதிகாரி தீர்மானித்திருக்கிறார்.

அரச அதிபர்கள், உதவி அரச அதிபர்கள் ஆகியோரைச் சந்தித்து இவ்விடயத்தில் அவர்களை ஆர்வம கொள்ளச் செய்ய அமைச்சர் தீர்மானித்திருக்கிறார்.

எதிர்வரும 28ஆம திகதி முதல் மாகாண சபை மட்டத்தில் எம பீமார்கள் மாகாண சபை உறுப்பினர்கள் அமைச்சர்கள், அரச அதிபர்கள், உதவி அரச அதிபர்கள் ஆகியோரைச் சந்திக்க அமைச்சர் தீர்மானித்திருக்கிறார்.

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் சீரான நிலைமை இல்லை.

அதனால் அப்பகுதிகளில் மறுவாழ்வுப் பணிகளை ஆரமபிக்க தாமதமாகி இருப்பதாகவும அமைச்சர் கூறினார். (ந–007)

# உள்ளூராட்சி மன்ற தேர்தல்:

## வேட்பாளர் தெரிவு பணிகள் ஆரம்பம்

கொழும்பு மே 22

விரைவில் நடைபெறவிருக்கும பிரதேச சபைகள் உள்ளூராட்சி மன்றங்கள் ஆகியவற்றுக்கான தேர்தல்களில் நிறுத்துவதற்கான வேட்பா

ஏற்கனவே வேட்பாளர்களைத் தெரிவு செய்யும பூர்வாங்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும அந்த உறுப்பினர் கூறினார்–

பிரதேச மாவட்ட மட்டத்தில் கட்சி உறுப்பினர்களின் இர

மகஜன கட்சியின் செயலாளர் திரு வை பீ டி சில்வா கூறினார்–

எக்சத் சமாஜவாதி பெரமுனை இத் தேர்தலில் போட்டியிடுவதா இல்லையா? என்பது தொடர்பாக இதுவரை தீர்

தேவை கதைக்கு ஏற்ப காட்சிகளை அமைத்து உருவாக்கி திரையிடத் தகுந்த பட அதிபர் தகுந்த பட அதிபர் இருந்

"காதலை பரிமாறிக் கொள்ள வசதியான இடம் அங்கே இருக்கு. வா போகலாம்" என்று திலீப்பை அழைக்கிறார் பல்லவி. (படம்: "பெண்கள் வீட்டின் கண்கள்") (ந-10)

சிவாஜி பிலிம்ஸ் புதிய படம்

## பிரபு-குஷ்பு ஜோடியாக "மை டியர் மார்த்தாண்டன்"

நூறு நாட்களை தாண்டி ஓடி வெற்றி பெற்ற "வெற்றி விழா" படத்தை அடுத்து சிவாஜி புரொடக்ஷன்ஸ் தயாரிக்கும் படம், "மைடியர் மார்த்தாண்டன்"

பிரபு கதாநாயகனாக நடிக்கும் இந்தப் படத்தில் அவருக்கு ஜோடியாக குஷ்பு நடிக்கிறார்.

இவர்களுடன் வி கே ராமசாமி எஸ் எஸ் சந்திரன் கவுண்டமணி சின்னி ஜெயந்த் கோவை சரளா மற்றும பலரும நடிக்கிறார்கள்.

இந்தப் படத்தை சுதந்திரதினமான ஆகஸ்ட் 15 ஆந் தேதி திரைக்கு கொண்டு வர திட்டமிட்டுள்ளனர்.

"மை டியர் மார்த்தாண்டன்" படத்தின் கதையை ஜி எம குமார் எழுதி இருக்கிறார். ஆர் பி விஸ்வம வசனம எழுதியுள்ளார்.

பிரதாப் போத்தன் திரைக்கதை அமைத்து டைரக்ட் செய்கிறார்.

இளையராஜா இசை அமைக்க அசோக்குமார் ஒளிப்பதிவு செய்கிறார். (ந-10)

வித்யாவுக்காக

## சந்திரசேகர் நாசர்-மோதல்

அந்த கிராமத்தில் ஆசிரியையாக வேலை பார்த்து வந்தார் வித்யா. அதே பள்ளியில் ஆசிரியராக பணி புரிந்து வந்த சந்திரசேகருக்கு வித்யா மீது காதல்.

தன் காதலை பலமுறை நாசுக்காக எடுத்துச் சொல்லியும வித்யா கண்டு கொள்ளவில்லை.

இந்த நிலையில் பண்ணையார் மகன் நாசரும வித்யா மீது ஆசைப்பட்டார்.

அவர் வித்யாவை பலவந்தப்படுத்தி கடத்தி சென்றார்.

தகவல் அறிந்த சந்திரசேகர் வித்யாவை காப்பாற்ற நாசருடனும அவரது அடியாட்களுடனும பயஙகரமாக மோதினார்.

அப்போது தற்செயலாக வந்த ரகுவரனும சந்திரசேகருடன் இணைந்து கொண்டு ரவுடிகளை விரட்டி அடித்தனர்.

வித்யா காப்பாற்றப்பட்டார்.

இப்படியொரு சண்டைக் காட்சி ஷகிலாலயா பிலிம்சின் "பொமபள மனசு" படத்துக்காக சென்னையை அடுத்த திருவிடந்தையில் படமாக்கப்பட்டது.

இந்த படத்தில் செந்தாமரை செந்தில் ரஞ்சனி கோவை சாளா மற்றும பலரும நடிக்கிறார்கள்.

தினபதி சினிமா

நாகராஜன் ஒளிப்பதிவு செய்கிறார். ரத்தினசூரியன் இசை அமைக்கிறார்.

பாலபாரதி வசனம எழுத விஜயபாரதி கதை, திரைக்கதை எழுதி டைரக்ட் செய்கிறார்.

இந்தப் படத்தை ஆரோக்கியம, ராஜ்ஷெரிப் இணைந்து தயாரிக்கிறார்கள். (ந-10)

தேசிய ரீதியில் பிரசாரம மேற்கொள்வது பற்றி இந்த மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது-

இதன் அங்குரார்ப்பணக் கூட்டம இன்று 22 ஆம திகதி கொழும்பு டி எஸ் சேனநாயக்கா மகா வித்தியாலயத்தில் நடைபெறும-

அங்கு குடும்ப மாதர்களுக்கு எரிபொருள் சேமிப்புப் பற்றி இலஙகை மின்சார சபை, காஸ் கமபெனி, பெற்றோலியக் கூட்டுத்தாபனம ஆகியவற்றைச் சேர்ந்த அனுபவம வாய்ந்த அதிகாரிகள் எடுத்துரைப்பதோடு செயல்முறை விளக்கமும அளிப்பர்-

எரிபொருள் சேமிப்பு தொடர்பாக எரிசக்தி மின் சக்தி அமைச்சுச் செயலாளர் அமரதாச குணவர்த்தன கூறியதாவது—

100க்கு 70 சதவீதமானோர் விறகு பாவிக்கிறார்கள்- 12 சதவீதமானோரே மின்சார அடுப்பைப் பயன்படுத்துகிறார்கள் எஞ்சிய 18 வீதமானோரில் 3 வீதமானோர் காஸ் பாவிக்கிறார்கள்-

கொழுமபில் பல வீடுகளில் விறகு அடுப்பு இருக்கிறது-

இதனால்தான் கொழுமபில் எமது பிரசார வேலையை தொடஙகுகிறோம்- அடுத்த

### லஞ்சம் வாங்கியதாக கைது

சோல். மே 21

தென் கொரிய எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் ஞாயிற்றுக்கிழமை கைதானார்.

வர்த்தகர் ஒருவரிடமிருந்து லஞ்சம பெற்றதாக இவர் கைதானார்.

காணி கொள்வனவு விவகாரத்தில் 28,000 டாலர்களை லஞ்சமாகப் பெற்றதாக லீ சாங் ஷே என்ற உறுப்பினர் ஒப்புக் கொண்டார். (எ)

கும பிரதேச சபைகள் உள்ளூராட்சி மன்றஙகள் ஆகியவற்றுக்கான தேர்தல்களில் நிறுத்துவதற்கான வேட்பாளர்களைத் தெரிவு செய்யும பணிகள் பல்வேறு அரசியற் கட்சிகளாலும ஆரமபிக்கப்பட்டுள்ளன-

இதனால் நாடு முழுவதும அரசியல் நடவடிக்கைகள் சூடு பிடிக்க ஆரமபித்துள்ளன-

260 பிரதேச சபைகளுக்கும 12 மாநகர சபைகளுக்கும 39 நகர சபைகளுக்குமான தேர்தல்கள் ஆகஸ்ட் மாதமளவில் நடைபெறலாம-

இவ்வாறு அரசாஙக வட்டாரஙகளிலிருந்து தெரிய வருகிறது-

இந்தக் குட்டித் தேர்தலில் போட்டியிடும வேட்பாளர்களின் எண்ணிக்கையில் அரைவாசிப் பேர் இளைஞர்களாக இருக்க வேண்டும-

சுமார் 30,000க்கு மேற்பட்டோர் இத் தேர்தலில் போட்டியிடுவர் என எதிர்பார்க்கப்படுகிறது-

வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் சகல பகுதிகளிலும உள்ள பல பிரதேச சபைகளுக்கும நகர சபைகளுக்கும ஸ்ரீலஙகா சுதந்திரக் கட்சி போட்டியிடும என கட்சியின் உப செயலாளர் ஏ எம கருணாரத்ன கூறினார்-

இளைஞர்களே கூடுதலாகப் போட்டியிட வேண்டும என்று சட்டம வந்தாலும நமது வேட்பாளர்களில் 40 விதமானோர் இளைஞர்களாகவே இருப்பர்-

இவ்வாறு அவர் கூறினார்-

ஐக்கிய தேசியக் கட்சியும நாடு முழுவதும உள்ள அநேகமான பிரதேச சபைகளுக்கும நகர சபைகளுக்கும போட்டியிடும என்று கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்-

... பட்டிருப்பதாகவும அந்த உறுப்பினர் கூறினார்-

பிரதேச மாவட்ட மட்டத்தில் கட்சி உறுப்பினர்களின் இரகசிய வாக்கெடுப்பில் ஜனநாயக முறையில் வேட்பாளர்கள் தெரிவாகினர் என்று அந்த உறுப்பினர் மேலும கூறினார்-

எக்சத் லஙகா ஜனதா கட்சியும இந்தக் குட்டித் தேர்தலில் போட்டியிட இருப்பதாகக் கட்சியின் செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகர கூறினார்-

தற்போதைய நிலையில் மகஜன எக்சத் பெரமுனை தனிக் கட்சியாக பல பிரதேச நகர சபைகளின் அதிகாரத்தைக் கைப்பற்றுப் போட்டியிடும-

இவ்வாறு கட்சித் தலைவர் திரு தினேஷ் குணவர்த்தன கூறினார்-

கட்சியின் சுயாதீனத்தைக் கட்டி எழுப்புவதற்காக இத் தேர்தலில் தனிக் கட்சியாகப் போட்டியிட தமது கட்சி தீர்மானித்திருப்பதாக ஸ்ரீலஙகா ...னார்-

எக்சத் சமாஜவாதி பெரமுனை இத் தேர்தலில் போட்டியிடுவதா இல்லையா? என்பது தொடர்பாக இதுவரை தீர்மானிக்கவில்லை என அக் கட்சியின் செயலாளர் திரு ராஜா கொல்லுறே குறிப்பிட்டார்-

மற்றைய எதிர்க்கட்சிகளுடன் கலந்தாலோசித்த பின்னர் இத் தேர்தலில் போட்டியிடுவது பற்றித் தமது கட்சி தீர்மானிக்கும-

இவ்வாறு லஙகா சமசமாஜக் கட்சியின் தலைவர் திரு பெர்னாட் சொய்ஸா தெரிவித்தார்,

இத்தேர்தல் பொதுத் தேர்தலுக்கு சமமானது ஆகவே 18 வயதுக்கும 35 வயதுக்கும இடைப்பட்ட அரசியல் ஆர்வமும தியாக மனப்பான்மையும உள்ள இளைஞர்களை வேட்பாளர்களாகத் தெரிவு செய்யுமாறு கமயூனிஸ்ட் கட்சி சகல இளைஞர்களுக்கும அறிவித்துள்ளது-

இவ்வாறு கமயூனிஸ்ட் கட்சியின் செயலாளர் திரு கே பீ சில்வா கூறினார் [ந—007]

பின்தங்கிய இடங்களில் கடமைபுரியும்

## அரச ஊழியருக்கு விசேட அலவன்ஸ்

கொழும்பு மே 22

மாகாண சபை நிர்வாகப் பகுதிகளின் பின்தஙகிய இடஙகளில் சேவையாற்றும் அரச ஊழியர்களுக்கு விசேட அலவன்ஸ் வழஙகப்படும-

பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் அமைச்சர் திரு ... பெஸ்டஸ் பெரேரா இவ்வாறு தீர்மானித்திருக்கிறார்-

மாகாண சபைகளில் கடமைபுரிய அரச ஊழியர்களை ஊக்குவிக்கவே இந்தத் தீர்மானத்தை அமைச்சர் எடுத்திருக்கிறார்-

அரச ஊழியரின் வீடில்லாப் பிரச்சினை தொடர்பாக நிவாரணம பெற்றுக் கொடுக்கவும அமைச்சர் நடவடிக்கை எடுத்திருக்கிறார்- [ந—007]

தினபதி

தந்தி "தினபதி" கொழும்பு
தொலைபேசி
23882, 23884, 23864
தபால் பெட்டி இல- 1613

— 1990 மே 23 —
சுடர் 18 கதிர் 4490

# ஆசிய நாடுகளில் நிதி நெருக்கடி ஏற்படுமா?

## கிழக்கு ஐரோப்பாவில் அரசியல் மாற்றத்தினால் உருவான பிரச்சினை

கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் நடைபெற்று வரும பிரமாண்டமான மாற்றங்கள் அரசாங்கங்களின் வீழ்ச்சி, தலைமைத்துவங்களை நிராகரித்தல் ஆகியன வெகுஜன உத்வேகம காரணமாக ஏற்பட்டவையாகும.

அந்த நாட்டவர்கள் பழைய எதேச்சாதிகார ஸ்டாலின் பாணி சோஷலிஸத்தை நிராகரித்த விட்டனர் என்று அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

இதை வைத்துக்கொண்டு இந்த நாடுகள் - அவற்றின் சில அறிவு, விஞ்ஞான, ஆத்மீகத் துறைகளில் மிகவும முன்னேற்றமடைந்தவை - மீண்டும பழைய முதலாளித்தவ முறைக்கு திருமபுவதாக சில வட்டாரங்கள் நினைக்கின்றன.

இந்நாடுகள் மனித சுதந்திரம உள்ள சமூக நீதியை வழங்கக்கூடிய ஒரு சமுதாய அமைப்பையே கடைசியில் நிறுவப்போகின்றன. இது ஜனநாயக சோஷலிஸ முறையாக இருக்கும. மேலும இன்று ஜனநாயக சோஷலிஸத் தத்துவத்திற்கு ஐரோப்பாவில் பெரும கிராக்கி ஏற்பட்டுள்ளது.

கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் பொருளாதாரம கடந்த இரண்டு தசாப்தங்களாக தேங்கி ஸ்தமபித்துக் கிடந்தன. ஸ்திரமான பொருளாதார வளர்ச்சியைக் கொண்டிருந்த ஹங்கேரி, செக்கோஸ்லவாக்கியா, கிழக்கு ஜெர்மனி ஆகியன இதில் அடங்கும. கடினமான மத்தியமயமாக்கப்பட்ட பொருளாதார அமைப்பு இதற்குக் காரணமாகும.

இந்த நாடுகளில் மாற்றங்களுக்கான காரணிகள் நாட்டுக்குள்ளேயே இருந்து வந்தன. சோவியத் யூனியனில் திரைநீக்கம செய்யப்பட்ட பெரிஸ்த்ரோய்கா சீர்திருத்தம இதற்கு உத்வேகம பாய்ச்சியது உண்மையே.

கிழக்கைரோப்பாவில் ஏற்பட்டு வரும பொருளாதார மாற்றங்கள், அரசாங்க ஏக போகத்தை நிராகரிப்பதாகவும சந்தைப் பொருளாதாரத்தை உருவாக்குவதாகவும, சொத்துரிமையில் பல்வேறு வடிவங்களை அங்கீகரிப்பதாகவும அமைந்துள்ளன.

அரசியல் துறையிலும தீவிரமான மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. ஒரு கட்சி, அதாவது கமயூனிஸ்ட் கட்சி ஆட்சி போய் பல்வேறு அரசியல் போக்குகள் தேசிய அரங்குகளில் தலைதூக்குகின்றன.

ஏறத்தாழ எல்லா கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும கூட்டு அரசாங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சோவியத் யூனியனில் கமயூனிஸ்ட் கட்சி சீர்திருத்த இயக்கத்துக்கு தலைமை தாங்கி, முன்னின்று மாற்றங்களை புகுத்தியது, இது கிழக்கு ஐரோப்பாவில் ஏற்படவில்லை.

கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் இன்று கமயூனிஸ்ட் கட்சிகளுக்கு சோதனைக் காலம என்று வர்ணித்துவிடலாம. ரூமேனியாவிலிருந்து கமயூனிஸ்ட் கட்சி முற்றாகத் துடைத்தெறியப்பட்டுள்ளது.

கிழக்கைரோப்பாவில் இவ்விதம ஏற்பட்டிருக்கும அரசியல் மாற்றம ஆசியாவில் எத்தகைய தாக்கத்தைக் கொடுக்கும?

ஆசிய நாடுகளில் குறிப்பாக தென்கிழக்கு ஆசிய நாடுகளில் நிதி, பொருளாதார, வர்த்தக நடைமுறையில் பாரிய மாற்றம ஏற்படலாம என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(ம)

## ஊழியர் சேமலாப நிதி

தொழில் கொடுக்கும நிறுவனங்கள் ஊழியர் சேமலாப நிதிக்குச் செலுத்த வேண்டிய பணத்தை அரசாங்கம உரிய காலத்தில் அறவிடத் தவறுவதால் ஊழியர்கள் வெகுவாகப் பாதிக்கப்படுகிறார்கள்.

தனியார் நிறுவனங்கள் மட்டுமன்றி அரசாங்க நிறுவனங்களும கூட ஊழியர் சேமலாப நிதிக்குச் சேர வேண்டிய பணத்தை ஒழுங்காகச் செலுத்துவதில்லை என்பது தெரிய வந்திருக்கிறது.

இந்த நிறுவனங்கள் எல்லாம ஊழியர்களின் சமபளத்திலிருந்து 8 சத வீதத்தை ஊழியர் சேமலாப நிதிக்குச் செலுத்துவதற்காகக் கழிக்கின்றன.

இந்தத் தொகையுடன் நிறுவனங்கள் ஊழியர்களின் சமபளத்தில் 12 சத வீதத்தைச் சேர்த்து மொத்தமாக ஊழியர் சேமலாப நிதிக்குச் செலுத்த வேண்டும.

பல நிறுவனங்கள் ஊழியர்களின் சமபளத்திலிருந்து கழிக்கும பணத்தைத் தமது செலவுக்கு எடுத்து விட்டுச் சுமமா இருந்து விடுகின்றன.

ஊழியர் சேமலாப நிதிக்கு நிறுவனங்கள் 4 கோடி ரூபாவுக்கு மேல் செலுத்த வேண்டியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக ஆற்றுப் பள்ளத்தாக்குகள் அபிவிருத்திச் சபை தனது ஊழியர்கள் சார்பில் 50 லட்சம ரூபாவைச் செலுத்த வேண்டியிருக்கிறதாம.

## புலவர் மணி நூல் வெளியீட்டு விழா

மட்டக்களப்பு, மே, 21

புலவர்மணி நினைவுப் பணிமன்றம நடத்திய நூல் வெளியீட்டு விழாவும, நூல்கள் அறிமுக விழாவும மட்டக்களப்பு மாநகர சபை மண்டபத்தில் நடைபெற்றன.

விழாவிற்கு கலாநிதி இ பாலசுந்தரம, கலாநிதி மௌனகுரு, ஆசிரியமணி பஞ்சாட்சரம, வித்துவான் சொக்கன் (சொக்கலிங்கம) ஆகியோர் யாழ்ப்பாணத்தில் இருந்து வந்து கலந்து கொண்டனர்-

ஆசிரியமணி பஞ்சாட்சரம விழாவில் பதிலுரை ஆற்றும போது, இதே மாதிரியான பெருவிழா ஒன்று மிக விரைவில் வடக்கிலும நடைபெறும என்று கூறினார்-

திரு [illegible] நடராசா நன்றி உரையாற்றினார். [வி-கு-404]

## 100 கிராம் பாண் வெள்ளி முதல் கிடைக்கும்

கொழுமபு, மே 22

100 கிராம நிறை கொண்ட 1 ரூபா 25 சத பாண் எதிர்வரும 25 ஆம திகதி முதல் கொழுமபு நகரில் விற்பனையாகும-

உணவு, கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு வீரசிங்க மல்லிமாராச்சி இதற்கான நடவடிக்கையை எடுத்திருக்கிறார்-

ஆரமப கட்டமாக ஒரு நாளைக்கு ஒரு லட்சம பாண் விநியோகிக்கப்படும-

புதிய பாண் முறையை பேக்கரிகள் பகிஷ்கரித்தால் பெட்டிஸ், கட்லஸ் போன்றவற்றைத் தயாரிப்பதற்கு பேக்கரிகளுக்கு மா கொடுக்கப்பட மாட்டாது என அமைச்சர் கூறினார்-

பொரளை விற்பனைத் திணைக்கள சமையற் கூடத்திலும எதிர்வரும 25 ஆம திகதி முதல் இந்த 100 கிராம பாண் விற்பனை ஆரமபமாகும-

சபாநாயகர் அல்ஹாஜ் எம எச் முகமமது உட்பட அமைச்சர்கள், எம பிமார்கள் பலரும இது தொடர்பாக நடைபெறும வைபவத்தில் பங்கு பற்றுவர்-

(ண-007)

## ஜனாதிபதி செயலக சேவையுடன்

## பள்ளிவாசலுக்கு மின்சாரம்

நாத்தாண்டி, மே, 21

நாத்தாண்டி நகருக்கு அண்மையிலுள்ள மாணிங்கலைக் கிராமக் குடியேற்றப் பகுதியிலுள்ள முஸ்லிம பள்ளிவாசலுக்கு அண்மையில் மின்

பயிற்றப்பட்ட உத்தியோகத்தர்

## கிராமங்களிலுள்ள கைப்பணியாளர்களுக்கு போதனைவழங்க வேண்டும்

— ராஜாங்க அமைச்சர்

கொழும்பு மே 18

பயிற்றப்பட்ட உத்தியோகத்தர்கள் சகல கிராமங்களிலுள்ள சிறு கைத்தொழிலாளர்களுக்கும கைப்பணியாளர்களுக்கும போதனைகளை வழங்கி, அதன் மூலம வெளிநாட்டு செலாவணியை பெற்றுக் கொடுக்க முன்வர வேண்டும-

இவ்வாறு கிராமத் தொழில் துறை அபிவிருத்தி ராஜாங்க அமைச்சர் திரு எச் ஜி பி நெல்சன் கூறினார்-

சுய தொழில் திட்ட அலுவலர்களும, தொழிலாளர் [illegible] மூலம கிடைத்த உதவிகளைக் கொண்டு பயிற்சிகள் வழங்கும வேலைத் திட்டம ஆரமபிக்கப்பட்டது-

இப்பயிற்சிகள் மூலம [illegible]க்கு கூடிய வரையில் சுய தொழில் வாய்ப்புகளை பெற்றுக் கொடுக்க உத்தேசித்துள்ளோம-

சாதி மத பேதமின்றி சகலருக்கும கிராமங்கள் தோறும சுய தொழில் பயிற்சிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும-

அமைச்சர் திரு எஸ் தொண்டமானுடைய உதவியுடன் பல வேலைத் திட்டங்களை செய்

## செய்தித் திரட்டு

### நெடுந்தீவில் சிறுவர் பூங்கா

புங்குடுதீவு, மே 21

நெடுந்தீவு மத்தியில் சிறுவர் பூங்கா அமைப்பதற்கான தொடக்க வேலைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

இதற்கான சகல ஒழுங்குகளையும தீவுப்பகுதி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் மேற்கொண்டுள்ளனர்.

நெடுந்தீவில் முதன்முதல் அமையவிருக்கும சிறுவர் பூங்கா இதுவாகும.

(ஐ-240)

### தமிழ்த் தின விழா 24 ஆம் திகதி

நிந்தாவூர், மே 21

கல்முனை கோட்டமட்டத்திலான தமிழ் தினவிழா இமமுறை வெகு சிறப்பாக நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

எதிர்வரும 24ஆம திகதி கல்முனை கார்மல் பாத்திமாக் கல்லூரியில் இந்த தமிழ் தின விழா நடைபெறவிருக்கின்றது.

கல்முனை உதவிக் கல்விப் பணிப்பாளர் ஜனாப் ஐ எம இஸ்மாயீன் தலைமையில் விழா நடைபெறும.

(ஐ-217)

### கோட்டக் கல்வி அலுவலகங்கள்

கட்டுகஸ்தோட்டை, மே 21

இமமாதம 7ஆம திகதி முதல் கண்டி மாவட்ட கல்வித் திணைக்களத்தின் கண்டி, செங்கடகல, ஹேவாஹெற்ற கோட்டக் கல்வி அலுவலகங்கள் இயங்க ஆரமபித்துள்ளன.

கண்டி கோட்டக்கல்வி அலுவலகத்தின் உதவிக் கல்விப் பணிப்பாளராக திரு எம பஸ்நாயக்கவும, பிரதம கல்வி அதிகாரியாக ஜனாப் ஜே ஏ அஸீஸ-ம நியமிக்கப்பட்டுள்ளனர்.

கண்டி கல்வித் திணைக்களத்தின் பிரதம கல்வி அதிகாரி ஜனாப் எம குத்தூஸ் கல்விப்

...டுள்ளது.

குறிப்பாக ஆற்றுப் பள்ளத் தாக்குகள் அபிவிருத்திச் சபை தனது ஊழியர்கள் சார்பில் 50 லட்சம் ரூபாவைச் செலுத்த வேண்டியிருக்கிறதாம்.

ஆற்றுப் பள்ளத்தாக்குகள் அபிவிருத்திச் சபை சமீபத்தில் கலைக்கப்பட்டு விட்டது. ஆயின் பணத்தை யாரிடமிருந்து எப்படி அறவிடுவது?

ஊழியர் சேமலாப நிதிக்குச் சேர வேண்டிய பணத்தை உரிய காலத்தில் அறவிடாமல் காலம் தாழ்த்தி அறவிட்டால் பெருமளவு வட்டித் தொகையை ஊழியர்கள் இழந்து விடுவார்கள்.

சேமலாப நிதிக்குரிய வட்டியை 13 சத வீதத்திலிருந்து 11 சத வீதமாக அரசாங்கம் குறைத்து விட்டது. இந்த வகையில் அரசாங்கமும் ஊழியர்களைச் சோதிக்கிறது.

பண வீக்கம் ஏற்பட்டு வரும் இந்நாட்களில் வட்டியைக் குறைத்தால் எப்படி இருக்கும்?

ஊழியர் சேமலாப நிதியில் உள்ள பணத்தை பிணையாக வைத்து வங்கியில் கடன் பெறுவதானால் அதற்கு வங்கி 22 சத வீத வட்டி அறவிடுகிறது. அதில் பாதியைத் தான் ஊழியர் சேமலாப நிதித் தொகைகளுக்கு அரசாங்கம் கொடுக்கிறது என்றால் அது நியாயமா?

12 சத வீத வட்டி பெறுவதிலும் ஊழியர் சேமலாப நிதியில் உள்ள பணத்தை எடுத்து சேமிப்பு வங்கியிலோ அல்லது பினான்ஸ் கம்பனி களிலோ வைப்புச் செய்தால் எவ்வளவோ ஆதாயம் என்றே பலரும் நினைக்கிறார்கள்.

அரசாங்கம் இவற்றைக் கவனத்தில் கொண்டு ஆவன செய்ய வேண்டும்.

---

...போது. இதே மாதிரியான பெரு விழா ஒன்று மிக விரைவில் வடக்கிலும் நடைபெறும் என்று கூறினார்.

திரு ... நடராசா நன்றி உரையாற்றினார். [வி-கு-404]

---

புதிய பாண் முறையை பேக்கரிகள் பகிஷ்கரித்தால் பெட்டிஸ், கட்லஸ் போன்றவற்றைத் தயாரிப்பதற்கு பேக்கரிகளுக்கு மா கொடுக்கப்பட மாட்டாது என அமைச்சர் கூறினார்.

பொரளை விற்பனைத்...

---

ஜனாதிபதி செயலக சேவையுடன்

# கேகாலையில் முஸ்லிம் சமய அமைச்சின்சேவை

## — அஸ்வர்

கொழும்பு, மே 21

இம்முறை கேகாலையில் நடமாடும் ஜனாதிபதி செயலக சேவை நடைபெறும் போது முஸ்லிம் சமய, கலாசார ராஜாங்க அமைச்சின் செயலக சேவையும் நடைபெறும்.

இதனை முஸ்லிம் சமய கலாசார ராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் ஏ எச் எம் அஸ்வர் "தினபதி"க்குத் தெரிவித்தார்.

முதல் ஏற்பாடாக இந்த நடமாடும் ஜனாதிபதி அலுவலகச் சேவையைப் பயன்படுத்தி கேகாலை மாவட்டத்தில் வாழும் முஸ்லிம்களின் முழு விவரங்களும் சேகரிக்கப்படும்.

கேகாலை மாவட்டத்திலுள்ள மஸ்ஜித்கள், மத்ரஸாக்கள், கற்றறிந்த முஸ்லிம்களின் விவரம், தொழில் இல்லாத முஸ்லிம்களின் விவரம், உலமாக்களின் விவரம், இங்கு வாழும் முஸ்லிம்களின் எண்ணிக்கை ஆகியவை இச்சேவையின் மூலம் திரட்டப்படும்.

அத்தோடு முஸ்லிம்களின் வரலாறு இப்பகுதியில் உள்ள பாரம்பரிய இஸ்லாமியக் கலைகள், பண்பாடு, கலாசாரம் ஆகிய விடயங்கள் குறித்தும் இங்கு ஆராயப்படும்.

இனி மேல் ஒவ்வொரு நடமாடும் ஜனாதிபதி செயலக சேவைகள் நடைபெறும் போதும் அந்தந்த மாவட்டங்களின் முஸ்லிம்கள் பற்றிய முழு விவரங்களும் திரட்டப்படும்.

இது மிக நன்மை தரும் ஒரு விடயமாக அமையும், இதன் மூலம் சமுதாயத்துக்கு நிறைய பலன்களைப் பெற்றுத் தொடுக்கலாம்.

அஸ்வர் இவ்வாறு கூறினார்.

கேகாலை மாவட்டத்தில் தமது அமைச்சு மூலம் மேற்கொள்ளவுள்ள பணிகள் தொடர்பாக அமைச்சர் அந்த மாவட்டப் பிரமுகர்களை அழைத்து உரையாடியுள்ளார். (இ-007)

---

## மின்சாரம்

நாத்தாண்டி, மே, 21

நாத்தாண்டி நகருக்கு அண்மையிலுள்ள மாணிங்கலைக் கிராமக் குடியேற்றப் பகுதியிலுள்ள முஸ்லிம் பள்ளிவாசலுக்கு அண்மையில் மின்சாரம், வழங்கப்பட்டுள்ளது.

நாத்தாண்டிப் பிரதேச சபையின் மாணிங்கலை உறுப்பினரும், சமாதான நீதிபதியுமான ஜனாப் எம் எஸ் எம் மஸ்னவி மேற்கொண்ட நடவடிக்கைகளின் பயனாக மின்னொளி கிடைக்கப் பெற்றது.

முன்னை நாள் மின்சக்தி, எரிசக்தி அமைச்சரும், தற்போதைய பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபை அமைச்சருமான திரு பெஸ்டஸ் பெரேரா இக்கிராம முஸ்லிம்களின் இக்கோரிக்கையைப் பூர்த்தி செய்து கொடுக்கும்படி முன்னர் பணிப்புரை வழங்கியிருந்தார். (இ-225)

---

# மலையக விவகாரம்: நவ சமசமாஜ கட்சி கண்டனம்

கொழும்பு, மே 22

மலையக மக்கள் முன்னணியின் தலைவர் சந்திரசேகரன் கைது, மற்றும் இந்தியக் கடவுச் சீட்டு வைத்திருக்கும் தோட்டத் தொழிலாளர்களை இந்தியாவுக்கு அனுப்பும் தீர்மானம் ஆகியவற்றை நவசமசமாஜக் கட்சி வன்மையாகக் கண்டித்துள்ளது.

தொழிற் சங்கங்கள் மற்றும் அதன் தலைவர்களுக்கு எதிராக அரசாங்கம் அவசரகால சட்டத்தைப் பயன்படுத்தி வருகிறது.

தோட்டத் தொழிலாளர் எண்ணிக்கையைக் குறைப்பது மூலம் தேயிலைத் தோட்ட நிர்வாகச் செலவைக் குறைக்கலாம் என்ற எண்ணத்துடன் தொழிலாளர்களை அரசாங்கம் வெளியேற்ற திட்டமிட்டுள்ளது.

இவ்வாறு தமது கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ள நவசமசமாஜக் கட்சி, தோட்டத் தொழிலாளரின் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் எல்லா தொழிற் சங்கங்களும் ஒன்றுபட வேண்டுமென அறைகூவல் விடுத்துள்ளது. (ந-032)

---

...நாட்டு செலாவணியை பெற்றுக் கொடுக்க முன்வர வேண்டும்.

இவ்வாறு கிராமத் தொழில் துறை அபிவிருத்தி ராஜாங்க அமைச்சர் திரு எச் ஜி பி நெல்சன் கூறினார்.

சுய தொழில் திட்ட அலுவலர்களுக்கும், தொழிலாளர் திட்ட அலுவலர்களுக்குமான பயிற்சித் திட்ட இறுதி வைபவம் இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்றது.

இளைஞர் விவகார விளையாட்டுத் துறைகள் அமைச்சும், உல்லாச பயணத்துறை, கிராமத் தொழிற்றுறை அபிவிருத்தி அமைச்சும் இணைந்து இதனை ஏற்பாடு செய்திருந்தன.

பயிற்சியை சர்வதேச தொழிலாளர் அமைப்பும் (ஐ எல் ஓ), ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி அமைப்பும் இணைந்து வழங்கின.

இவ் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் மேலும் கூறியதாவது:

வெளிநாட்டு நிறுவனங்களின் ...தொழில் வாய்ப்புகளை பெற்றுக் கொடுக்க உத்தேசித்துள்ளோம்.

சாதி மத பேதமின்றி சகலருக்கும் கிராமங்கள் தோறும் சுய தொழில் பயிற்சிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அமைச்சர் திரு எஸ் தொண்டமானுடைய உதவியுடன் பல வேலைத் திட்டங்களை செய்துள்ளோம்.

இவ்வாறு ராஜாங்க அமைச்சர் திரு எச் ஜி பி நெல்சன் கூறினார்.

வைபவத்திற்கு உல்லாசப் பயணத்துறை, கிராம தொழிற்துறை அபிவிருத்தி அமைச்சர் திரு எஸ் தொண்டமான், இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சர் திரு நந்தா மத்தியூ, மகாவலி மூலத் திரட்டல் திட்டவள அமைச்சர் திரு ஆனந்த விக்கிரமசிங்க, ஐ எல் ஓ பணிப்பாளர் திரு ஸ்டான்லி டெய்லர், யூ என் டி பி பணிப்பாளர் திரு ரோபர்ட் இங்லண்ட் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டனர். (ஐ-டி)

---

கூட்டுறவுத்துறையில்

# கட்டாய அடிப்படையில் 80 லட்சம் பேர் சேர்க்கப்படுவர்

## மல்லிமாராட்சி

கொழும்பு, மே 22

80 லட்சம் பேர் கட்டாய அடிப்படையில் கூட்டுறவுத் துறையில் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

உணவு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு வீரசிங்க மல்லிமாராச்சி இப்படித் தீர்மானித்திருக்கிறார்.

உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்வதற்காக ஆகஸ்ட் மாதத்தில் கூட்டுறவு வாரமும் அனுட்டிக்கப்படும்.

தற்போது கூட்டுறவுத்துறையில் அங்கத்துவம் பெற்றுள்ளவர்களின் எண்ணிக்கை 33 லட்சமாகும்.

முழு இலங்கையையும் தழுவிய அடிப்படையில் உறுப்பினர்கள் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டுமென அமைச்சர் தெரிவித்திருக்கிறார். [ண—007]

---

## கட்டிடங்கள் அமைப்பு

வெலிகாமம, மே 21

மாத்தறை மாவட்டத்தில் உள்ள மொறவக்க கல்விப் பிரதேசத்தில் மூன்று வித்தியாலயங்களில் கட்டிடங்கள் அமைக்கப்பட இருக்கின்றன.

கல்வி அமைச்சு இதன் வேலைகளுக்கு என பத்து லட்சம் ரூபா நிதியை ஒதுக்கி உள்ளது. (ஐ-331)

---

கண்டி தோட்டக்கல்வி அலுவலகத்தின் உதவிக் கல்விப் பணிப்பாளராக திரு எம் பஸ்நாயக்கவும், பிரதம கல்வி அதிகாரியாக ஜனாப் ஜே ஏ அஸீஸும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கண்டி கல்வித் திணைக்களத்தின் பிரதம கல்வி அதிகாரி ஜனாப் எம் குத்தூஸ் கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றுள்ளார். (ஐ-139)

---

## சிரமதான மூலம் கரும்பலகைகள்

கிண்ணியா, மே 21

தி-சமாஜத்தீவு, அ மு க பாடசாலையில் இவ்வித்தியாலய மாணவர்களின் நலன்கருதி சிரமதான மூலம் (நான்கு) கரும்பலகைகள் அமைத்து கையளிக்கப்பட்டிருக்கின்றன.

இவ்வித்தியாலய அதிபர் ஜனாப் எம் எச் கபூரினால் அப்பகுதி பெற்றோர்களின் அனுசரணையுடன் சிரமதான மூலம் அமைக்கப்பட்ட கரும்பலகையே கையளிக்கப்பட்டது.

கடந்த வாரம் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் மூலம் இப்பாடசாலையைச் சுற்றி வேலி ஒன்று அமைக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ-151)

---

## ரந்தெனிகல நீர்த்தேக்க திட்டம்

தெல்தெனிய, மே 21

ரந்தெனிகல நீர்த்தேக்கத் திட்டம் எதிர்வரும் 26ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்படும்.

இதனை ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாச ஆரம்பித்து வைப்பார்.

இதற்கான ஏற்பாடுகள் மிகத் துரிதமாக நடைபெற்றுக் கொண்டு வருகின்றன (ஐ-209)

பாகிஸ்தானுடன் பேச்சு நடத்தக் கோரும்

# அமெ. வேண்டுகோள்:

# இந்தியா நிராகரிப்பு

## அமெ. ஜனாதிபதியின் தூதுவர் பிரதமர் சிங்கை சந்தித்தார்

புதுடில்லி, மே. 22

**காஷ்மீர் நெருக்கடியைத் தீர்க்க பாகிஸ்தானுடன் பேச்சு நடத்த முன்வருமாறு அமெரிக்கா வேண்டுகோள் விடுத்தது. இந்த வேண்டுகோளை இந்தியா நிராகரித்துள்ளது.**

இந்தியப் பிரதமர் விஸ்வநாத் பிரதாப் சிங் அமெரிக்காவின் வேண்டுகோளை திங்களன்று நிராகரித்தார்—

இஸ்லாமாபாத் பயங்கரவாதத்துக்கு ஆதரவு காட்டி வருகிறது; இந்திய எல்லைகள் இரண்டை ஆக்கிரமிப்புச் செய்து கொண்டிருக்கிறது— இவ்வாறு இந்தியப் பிரதமர் குற்றஞ் சாட்டினார்—

அமெரிக்க ஜனாதிபதியின் அரசியல் ஆலோசகர் ரொபர்ட் கேட்ஸ், இந்தியப் பிரதமரைச் சந்தித்தார்— ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ், காஷ்மீர் நெருக்கடியைத் தீர்ப்பதற்காக ரொபர்ட் கேட்ஸை தமது விசேட பிரதிநிதியாக இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் செல்லுமபடி பணித்தார்—

கேட்ஸ் — சிங்கை சந்தித்த போது உபகண்டத்தில் இன்று நிலவும் பதற்றத்திற்கு மூல காரணம் பாகிஸ்தானின் நடவடிக்கைகளே என சிங் குற்றம் சாட்டினார்—

ஞாயிற்றுக்கிழமை இஸ்லாமாபாத்தில் வெளிவிவகார அமைச்சர் இந்தர் குமார் குஜ்ராலை கேட்ஸ் சந்தித்தார்— அந்தச் சந்திப்பை முடித்துக் கொண்டு அவர் புதுடில்லி வந்தார்—

பிரதமர் சிங்கைச் சந்தித்ததும் அமெரிக்க ஜனாதிபதியின் கடிதமொன்றைக் கையளித்தார்— அதன் பின்னரே உரையாடல் இடம்பெற்றது—

1972 ஆம் ஆண்டில் புதுடில்லியும் இஸ்லாமாபாத்தும் சிம்லா ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன— இரு நாடுகளுக்குமிடையே நடந்த யுத்தத்தின் பின் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது—

சிமலா ஒப்பந்தத்திற்கு மதிப்பளித்து இந்தியாவும், பாகிஸ்தானும் இந்திய உபகண்டத்தின் அமைதிக்காக பேச்சுவார்த்தை நடத்த முன்வர வேண்டும்—

இவ்வாறு ரொபர்ட் கேட்ஸ் கேட்டுக் கொண்டிருக்கிறார்— (எ)

ஹரியானா வேட்பாளர்

## அமிர் சிங் படுகொலை நாடாளுமன்றத்தில் மீண்டும் பலத்த எதிர்ப்பு

புதுடில்லி, மே 22

ஹரியானா மெஹம் ஆசனத்துக்காகப் போட்டியிடவிருந்த சுயேச்சை வேட்பாளர் அமிர்சிங் படுகொலைக்கு புதுடில்லி நாடாளுமன்றத்தில் திங்களன்று பலத்த எதிர்ப்புக் காட்டப்பட்டது—

நாடாளுமன்றத்தில் கடும் வார்த்தைகள் பிரயோகிக்கப்பட்டன— அவரது படுகொலைக்கு பிரதி அமைச்சர்கள் காரணமென குற்றஞ்சாட்டப்பட்டது—

சர்ச்சைக்குரிய சட்ட சபைத் தேர்தலில் போட்டியிடவிருந்த அமிர்சிங்கின் உடல் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் கடந்த மே 17 ஆம் திகதி கண்டுபிடிக்கப்பட்டது— சட்ட சபைத் தேர்தலில் மாநில முதல் அமைச்சர் பிரகாஷ் சௌதாலாவும் ஒரு வேட்பாளராக போட்டியிடவிருந்தார்—

அமிர் சிங்கின் படுகொலையை அடுத்த கடந்த 18 ஆம் திகதியும் நாடாளுமன்றத்தில் பெரும் அமளி துமளி ஏற்பட்டது—

எதிர்க்கட்சியினரின் குரலுக்கு செவிமடுத்த அரசாங்கம் அமிர் சிங்கின் படுகொலை பற்றி சட்ட விசாரணை நடத்த வேண்டும் எனப் பணித்தது— (எ)

### ஆர்ப்பாட்ட ஊர்வலம்

அமான் மே 22

இஸ்ரவேல் கைப்பற்றியுள்ள எல்லைப்புறத்தில் கடந்த 24 மணி நேரத்துக்குள் உயிரிழந்தவர்கள் சார்பாக ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டது;

ஜோர்தான் தலை நகரிலும் மற்றும் பல நகரங்களிலும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் திங்களன்று இடம்பெற்றன.

பல அகதி முகாமகளிலும் ஆர்ப்பாட்டங்கள் இடம் பெற்றன. (எ)

## காஷ்மீர் வன்முறை: உக்கிரமடைய இந்திய கொள்கைகளே காரணம்

### சல்மான் ருஷ்தி கருத்து

பட்ரிட் மே 22

காஷ்மீர் வன்முறைகள் அதிகரிக்க இந்தியாவின் கொள்கைகளே காரணம்.

இவ்வாறு சர்ச்சைக்குரிய எழுத்தாளர் சல்மான் ருஷ்தி கருத்து வெளியிட்டிருக்கிறார்.

இந்தியாவில் பிறந்த சல்மான் ருஷ்தியின் பேட்டியொன்று ஸ்பெயின் எல்—பாயிஸ் பத்திரிகையில் வெளியாகியிருக்கிறது.

அந்தப் பேட்டியில் மேலும் தெரிவிக்கப்பட்டு இருப்பதாவது:—

காஷ்மீர் விவகாரத்தில் இந்தியா கடைப்பிடித்து வந்த கொள்கைகளால் அடிப்படை வாதத்துக்கு காஷ்மீர் இஸ்லாமியர்கள் இழுத்துச் செல்லப்பட்டிருக்கின்றனர்.

அடிப்படை வாதக் கொள்கைகளை முன்னர் தவிர்த்து வந்த காஷ்மீர் முஸ்லிமகள் இன்று உக்கிரமான போராட்டம் நடத்த தலைப்பட்டிருக்கின்றனர்.

காஷ்மீர் எழுச்சி இந்திய — பாக். யுத்தமொன்றுக்கும் ஏதுவாகியிருக்கிறது—

சுய உரிமை கோரி வரும் காஷ்மீர் மக்களை இந்தியா அலட்சியம் செய்ததால் இன்று நிலைமை மோசமடைந்துள்ளது.

இவ்வாறு சல்மான் ருஷ்தி தமது பேட்டியில் தெரிவித்திருக்கிறார். (எ)

### "பாக். தலையீட்டால் உறவு பாதிப்பு" —சிங்

புதுடில்லி மே 22

காஷ்மீர் விவகாரத்தில் பாகிஸ்தான் வீணாகத் தலையிட்டு இந்தியாவுடனான உறவைத் துண்டித்துக் கொள்ள முயல்கிறது—

இந்தியப் பிரதமர் விஸ்வநாத் பிரதாப்சிங் இவ்வாறு குற்றம் சாட்டியிருக்கிறார்—

இக் குற்றச்சாட்டுப் பற்றி பி டி ஐ செய்தி ஸ்தாபனம் செய்தி வெளியிட்டிருக்கிறது—

காஷ்மீர் தீவிரவாதிகளுக்கு ஆயுதங்களை வழங்கியும், முகாம்களை அமைத்தும் உதவி வருகிறது பாகிஸ்தான்—

இந்த நிலையில் பாகிஸ்தானுடன் நட்புறவை வளர்க்க முடியாத நிலையில் நாம் இருக்கிறோம்—

இவ்வாறு இந்தியப் பிரதமர் குற்றம் சாட்டியிருக்கிறார்—

புயலால் பாதிப்புற்ற ஆந்திர பிரதேசத்தில் சிங் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டார்— அப்போதே அவர் இதுபற்றித் தெரிவித்தார்—

இந்திய வெளிவிவகார அமைச்சர் இந்தர் குமார் குஜ்ராலும், பாகிஸ்தானின் செய்கையை வெகுவாகக் கண்டித்திருக்கிறார்— (எ)

**உலகச் செய்திகள்**

## தாய்வான் அரசாங்கத்தில் இராணுவ தலையீட்டை தவிர்க்கக் கோரி ஆர்ப்பாட்டம்

தைபே, மே 22

தாய்வான் அரசாங்கத்தில் இராணுவத் தலையீட்டைத் தவிர்க்குமாறு கோரி ஆயிரக் கணக்கானோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பாதுகாப்பு அமைச்சர் ஹாவ்பேசுன் தாய்வானின் அடுத்த பிரதமராகி இருக்கிறார். இதற்கும மக்கள் எதிர்ப்பு இங்கு கிளம்பியிருக்கிறது.

இராணுவ அதிகாரத்தை ஹாவ்பே பயன்படுத்தலாம் என மக்கள் அஞ்சுகின்றனர்.

தாய்வான் ஜனாதிபதி லீ டெங் ஹியு ஆறு ஆண்டு காலத்துக்கு ஜனாதிபதியாக இருப்பார். கன்சர்வேட்டிவ் கட்சியைச் சேர்ந்த ஓய்வு பெற்ற இராணுவ ஜெனரல் ஹாவ் பேசுன் பிரதமராகத் தெரிவானது மக்கள் மத்தியில் ஆத்திரத்தைத் தோற்றுவித்திருக்கிறது.

அவரது தெரிவை எதிர்த்து 8,000 க்குமதிகமானோர் ஆர்ப்பாட்டம் நடத்தினர். (எ)

## பாகிஸ்தானில் வன்முறைகளை அடக்க அவசரகாலச் சட்டம்

### எதிர்க்கட்சியினர் குரல்

இஸ்லாமாபாத் மே 22

பாகிஸ்தானில் இடம்பெறும் வன்முறைகளை அடக்க அவசர காலச்சட்டம் அமுல் செய்யப்பட வேண்டும்.

இவ்வாறு எதிர்க்கட்சி வலியுறுத்தியிருக்கிறது.

பாகிஸ்தான் பிரதமர் பெனாஸிர் பூட்டோவின் சொந்த மாகாணமான சிந்து மாகாணத்தில் வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன.

இந்த வன்முறைகள் காரணமாக மொத்தம் 46 பேர் பலியாகியுள்ளனர். சிந்து மாகாணத்தில் 13 பேர் உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து எதிர்க்கட்சிகள் ஜனாதிபதி குலாம இஷாக் கானிடம வன்முறைகளை அடக்க அவசர காலச் சட்டத்தை அமுல் செய்யுமாறு கேட்டுள்ளனர்.

மொஹாஜிர் குடியேற்றவாசிகளுக்கும சிந்து இனத்தவருக்குமிடையே நடந்த மோதல்களை அடுத்து ஹைதராபாத் நகரில் திங்களன்று ஊரடங்கு அமுல் செய்யப்பட்டது. (எ)

அமிர்சிருகின் உடல் துப்பாக்கிச் (எ) | 1972 ஆம அண்டில் புகடில்லி | மக்கள் மத்தியில் ஆத்திரத்தைத் | யுறாத்தியிருக்கிறத. | மாத மொத்தம 46 பேர் பலி | செய்யப்பட்டத. (எ)

சேர் ராஸிக் பரீத் பவுண்டேஷனின்

# மேன் முறையீடு தொடர்பான விசாரணை 28இல்

கொழும்பு மே 22

பாமிஸ் இயக்கத்துக்கு எதிராக சேர் ராஸிக் பரீத் பவுண்டேஷன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மேன்முறையீடு எதிர்வரும 28 ஆம திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும.

இமமனுவை பரிசீலணைக்கு எடுத்தக் கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் அசோகா டி குணவர்தன மற்றும டக்ளஸ் விஜேரத்ன ஆகியோர் இமமனுவில் குறிப்பிடப் பட்டுள்ள 24 பிரதிவாதிகளும எதிர்வரும 28ஆம திகதி நீதிமன்றத்தில் ஆஜராகும்படி அழைப்பாணைகளை விடுத்தனர்.

கடந்த பெப்ரவரி 18ஆம திகதி நடைபெறவிருந்த பாமிஸ் வருடாந்த மாநாட்டை இடை நிறுத்தும்படி கோரி பரீத் பவுண்டேஷன் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்தது.

ஆனால் இதற்கு மறுப்பு தெரிவித்து மாவட்ட நீதிமன்றம தீர்ப்பளித்தது.

இத்தீர்ப்பை ஆட்சேபித்தே இப்போது சேர் ராஸீக் பரீத் பவுண்டேஷன் மேன்முறையீடு செய்துள்ளது.

கடந்த ஆண்டு வருடாந்த பாமிஸ் மாநாடு முடிவடைந்ததில் இருந்து பாமிஸ் தனது சட்ட திட்டஙகளை மீறும வகையில் நடந்து வந்துள்ளது. 1987-88 மற்றும 1988-90 ஆம ஆண்டுகளுக்கான மாதாந்த வரவு செலவு கணக்குகளை செயற்குழுவிடம சமர்ப்பிக்கத் தவறியுள்ளது.

லாபமின்றி பெரும செலவில் அச்சிடப்பட்டு வரும பாமிஸ் சஞ்சிகை முஸ்லிம காஙகிரசின் இனவாத அரசியலை வளர்ப்பதற்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

பத்தாம பிரதிவாதி முஸ்லிம காஙகிரஸ் உத்தியோகத்தராக இருந்து வருகின்ற போதிலும பாமிஸ் அலுவலகத்தை உபயோகித்து வர அவர் அனுமதிக்கப் பட்டிருக்கிறார். அஙகுள்ள தொலைபேசியையும தமது அரசியல் மற்றும வர்த்தக நடவடிக்கைகளின் பொருட்டு பாவித்து வருகிறார்.

மனுதாரர் ராஸிக் பரீத் பவுண்டேஷன் இப்படி இம மனுவில் குறிப்பிட்டிருப்பதோடு, கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தின் தீர்ப்பை ரத்துச் செய்யும்படி மேன்முறையீட்டு நீதிமன்றத்திடம வேண்டிக்கொண்டுள்ளது.

பாமிஸ் இயக்கத்துக்குச் சொந்தமான நிதியை இவ்வழக்

---

நிந்தவூர்ப் பகுதியைச் சேர்ந்த

# உழவு இயந்திர சாரதிகளுக்கு ரூ. 200 சம்பள அதிகரிப்பு

## விடுதலைப் புலிகளின் கூட்டத்தில் தீர்மானம்

நிந்தவூர் மே 21

நிந்தவூர்ப் பகுதியைச் சேர்ந்த உழவு இயந்திர சாரதிகளுக்கு இருநூறு ரூபா சமபள அதிகரிப்பு வழஙகப் பட்டுள்ளது-

நிந்தவூர் சாரதிகள் சஙகம் உழவு இயந்திர உரிமையாளர்களிடம சாரதிகளுக்கான மாதாந்த சம்பளத்தை 2000 ரூபாவாக வழஙக வேண்டுமெனக் கோரிக்கை விடுத்தது-

அத்துடன் இதனை நிந்தவூர்ப் பிரதேசத்துக்குப் பொறுப்பான தமிழீழ விடுதலைப் புலிகளின் கவனத்திற்கும சாரதிகள் சஙகம் கொண்டுவந்தது-

இதனைத் தொடர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் நிந்தவூர்ப் பிரதேசப் பொறுப்பாளர் திரு விக்ரம் தலைமையில் புலிகள் அலுவலகத்தில் சமரசக் கூட்டம ஒன்று நடத்தப் பட்டது

உழவு இயந்திர சாரதிகள சஙகப் பிரதிநிதிகளும் உழவு இயந்திர உரிமையாளர்களும கூட்டத்தில் கலந்து கொண்டனர்-

அத்துடன் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் நிந்தவூர் சிற்றூர்க் கிளைத் தலைவர் ஜனாப் எஸ் எச் அகமது உபதலைவர் டாக்டர் திரு வீ தவயோகநாதன் பொருளாளர் ஜனாப் வை எல் ஏ அசீஸ் ஆகியோரும் கூட்டத்தில் பிரசன்னமாக இருந்தனர்-

இந்த சமரசக் கூட்டத்தில் பின்வரும தீர்மானஙகள் எடுக்கப்பட்டன-

* தற்பொழுது சாரதிகளுக்கு வழஙகப்படும் 1300 ரூபா சம்பளத்தை மே மாதம முதல் அதிகரித்து 1500 ரூபாவாக வழஙகுதல்-
* தற்பொழுது வழஙகப் படும தேநீர்ச் செலவு 20 ரூபாவை சாரதிகளுக்கு 25 ரூபாவாக வழஙக வேண்டும-
* சாரதிகளை நீக்குவதானால் உரிமையாளர்கள் ஒரு மாத சம்பளத்தை வழஙகியே நீக்க வேண்டும-
* சாரதிகள் தொழிலினின்று நீஙகிக் கொள்ள விரும்பினால் உரிமையாளர்களுக்கு ஒருமாத முன்னறிவித்தல் கொடுக்க வேண்டும-
* எதிர்வரும் மூன்று போகஙகளுக்கு சாரதிகள் சமபள உயர்வு கோருதல் கூடாது,

[இ—217]

---

கின் இறுதி முடிவு தெரியவரும வரை செலவிடவோ அல்லது உபயோகிக்கவோ முதல் 19 பிரதிவாதிகளுக்கு அதிகாரம அளிக்கப்படக் கூடாது.

அவர்கள் பாமிஸ் உத்தியோகத்தர்களாகவும செயற்குழு உறுப்பினர்களாகவும இருக்க வழக்கின் இறுதி முடிவு தெரியவரும வரை அனுமதிக்கப்படக் கூடாது.

இவ்வாறு இமமனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-032)

---

# நடமாடும் வைத்திய சேவை

நாத்தாண்டி மே 21

நாத்தாண்டி நாடாளுமன்றத் தொகுதியைச் சேர்ந்த கட்டுநேரியில் நடமாடும வைத்திய சேவை அண்மையில் நடத்தப்பட்டது.

இது இத்தொகுதியில் நடத்தப்பட்ட மூன்றாவது நடமாடும வைத்திய சேவையாகும

வெளிவிவகார அமைச்சரும, ராஜாஙக நிதியமைச்சருமான திரு ஹெரல்ட் ஹேரத் வைபவ ரீதியாக இச்சேவையை ஆரமபித்து வைத்தார்.

மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் பி எஸ் ஏ குமாரதுஙக வைத்திய சேவை அத்தியட்சகர் டாக்டர் லால் திஸ்ஸேரா ஆகியோர் நோயாளர்களுக்கு சிகிச்சையும. வைத்திய ஆலோசனையும வழஙகினர்.

25]

---

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின்

# தீர்ப்பை ஆட்சேபித்து உயர்நீதிமன்றத்தில் மனு

## எதிர்வரும் 31இல் விசாரணை

கொழும்பு மே 22

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பை ஆட்சேபித்து வெலிகமை பெரிய பள்ளிவாசல் வழக்கின் மனுதாரர்கள் உயர் நீதிமன்றத்தின் விசேட அனுமதி கோரி தாக்கல் செய்துள்ள மனு மீதான விசாரணை எதிர்வரும 31 ஆம திகதி நடைபெறும-

வெலிகமை முஹியத்தீன் பெரிய பள்ளிவாசல் வக்பு சபை உறுப்பினர்களுக்கும விசேஷ தர்மகர்த்தாவாக நியமிக்கப்பட்டுள்ள உயர் பொலீஸ் சுப்ரிண்டன் எம எஸ் எம் நிஸாமுக்கும எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கை மேன்முறையீட்டு நீதிமன்றம சமீபத்தில் தள்ளுபடி செய்து தீர்ப்பு வழஙகியது-

அஙகீகாரம் பெற்ற உத்தியோகத்தரின் விண்ணப்பத்தின் பேரிலேயே நிஸாம விசேஷ நம்பிக்கையாளராக நியமிக்கப்பட்டாரென தனது தீர்ப்பில் நீதிமன்றம தெரிவித்திருந்தது-

இத்தீர்ப்பை ஆட்சேபித்து உயர் நீதிமன்றத்திற்கு மனு செய்து கொள்ள தமக்கு அனுமதி வழஙகுமபடி மனுதாரர்கள் தாக்கல் செய்த மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டது-

இதைத் தொடர்ந்தே மேன்முறையீட்டு நீதிமன்றத் தீர்ப்பை ரத்துச் செய்து உயர் நீதிமன்றத்திற்கு மனுச் செய்து கொள்ள தமக்கு அஙகீகாரம வழஙகும்படி மனுதாரர்கள் உயர் நீதிமன்றத்தில் விசேட அனுமதி கோரி மனுவைத் தாக்கல் செய்தனர்,

விசேஷ தர்மகர்த்தாவாக நியமிக்கப்பட்டுள்ள ஏழாவது பிரதிவாதி நிஸாமை இவ்வழக்கின் இறுதி முடிவு தெரியவருமவரை புதிய பள்ளிவாசலை அமைக்கும பணியை இடைநிறுத்தி வைக்க வேண்டுமெனவும இமமனுவில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது-

ஏ ஆர் என் முஸ்தகீம எச் எம மொஹிதீன் ஏ எஸ் ஜி அப்துல்லா எம டி எச் மொஹமத் ஆகிய நால்வரும இமமனுவை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளனர்-

இவர்கள் சார்பாக சட்டத்தரணிகள் எச் எல் டி சில்வா எம எஸ் ஏ ஹுசைன் அர்ஸா அமரசேகர ஆகியோர் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தனர்.

பிரதிவாதிகளான வக்பு சபை தலைவர் ஏ காதர் உறுப்பினர்கள் எம எஸ் எம ஏ ரஸாக் எம எச் ராஜுதீன் எம எச் புஹாரி எஸ் எம அர்ஸா எம எஸ் ஏ தாகர் ஆகியோர் சார்பாக சட்டத்தரணிகள் பாயிஸ் முஸ்தபா எம எஸ் சுஹாயிர் ஆகியோர் நீதிமன்றத்தில் சமுகமளித்திருந்தனர்-

[இ—032]

தனியார் பஸ்களுக்காக

# எரிபொருள் நிலையம் மாவட்டம் தோறும்

கொழும்பு, மே 22

தனியார் பஸ்களுக்கு இலகுவாக எரிபொருள் வழங்குவதற்காக மாவட்ட மட்டத்தில் எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் அமைக்கப்படும்.

தனியார் பஸ் போக்குவரத்துச் சங்கம் இதற்கான நடவடிக்கையை எடுத்து வருகிறது என சங்கத் தலைவர் திரு எச் டீ ஜே குருணானந்த தெரிவித்தார்.

இது தொடர்பாக பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டிருக்கிறது.

இதனைத் தொடர்ந்தே இந்த எரிபொருளை வழங்க இணக்கம் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

21 தனியார் பஸ் போக்குவரத்துச் சங்கங்களுக்காக 21 எரிபொருள் நிலையங்கள் அமைக்கப்படும்.

முதலாவது எரிபொருள் நிலையம் கொழும்பில் திறவப்படும் என்று திரு கருணானந்த தெரிவித்தார்.

(ஊ—007)

# எதையும் எவருக்கும் நாம் விட்டுக்கொடுக்க மாட்டோம்

## மூதூர்க் கூட்டத்தில் யோகி

— சேோ திரவியராசா —

மூதூர், மே 21

"நாம் எதையும் எவருக்கும் எந்த நேரத்திலும் விட்டுக் கொடுக்க மாட்டோம்!" இப்படி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் திரு யோகரத்தினம் யோகி அண்மையில் மூதூர் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரை நிகழ்த்துகையில் கூறினார்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி மூதூர் பிரதேச அரசியல் பொறுப்பாளர் திரு எம அரசன் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் பெரும் எண்ணிக்கையில் தமிழ், முஸ்லிம் பொது மக்கள் கலந்து கொண்டனர்.

திரு யோகி தமது உரையில் மேலும் கூறியதாவது—

### குடியேற்றம்

இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் வடக்கிலும், கிழக்கிலும் நடைபெற்ற திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் தொடர்பாக நாங்கள் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்திய போது விவரமாகத் தெரியப்படுத்தியுள்ளோம்.

இக்குடியேற்றங்கள் பற்றித் தீர்மானிக்க ஒரு குழுவை அமைப்பதாக எமக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வட—கிழக்கில் வாழும் தமிழ் — முஸ்லிம் மக்களிடையே பிளவை ஏற்படுத்தல் போன்றவை எல்லாம் இலங்கை அரசு கையாண்ட யுக்திகளாகும்.

இந்திய அரசு தமது படையை எமது பகுதிக்கு அனுப்பி இங்கிருந்த துரோகக் கூட்டத்தினரைத் தமவசமாக்கி — அவர்களுக்கு ஆயுதங்களை வழங்கி — தமது கூலிப்படைகளாகக் கொண்டு அட்டூழியங்களைப் புரிந்தது.

இதன் மூலம் எம்மை பலவீனப்படுத்தலாம் என இந்திய அரசு எண்ணியது.

அவர்களது இந்த எண்ணம் ஈடேறவில்லை. இவ் விடயத்தில் அவர்கள் தோல்வியே கண்டனர்.

### விட்டுக் கொடோம்

உலக அரங்கில் வல்லமை பெற்ற படைகளில் ஒன்றான இந்தியப் படையுடன் நேருக்கு நேர் மோதி அந்தப் படையை விரட்டியடித்துள்ளோம்.

இதன் மூலம் விடுதலைப் புலிகளாகிய நாங்கள் உலக அரங்கில் தனியிடம் பெற்றுள்ளோம். பலமும் அடைந்துள்ளோம்.

இவ்விதமான தனித்துவம் மிக்க வல்லாண்மை நிலையை அடைய எமது இயக்கம் பலதரப்பட்ட தியாகங்களைப் புரிந்துள்ளது.

நாங்கள் எதையும் விட்டுக் கொடுக்கும் நிலையில் இல்லை. எமது அடிப்படைக் கொள்கைகளில் எவற்றையும் விட்டுக் கொடுக்கும் எண்ணம் எமக்குக் கிடையாது.

### முஸ்லிமக்கள் பங்களிப்பு

வடக்கு — கிழக்கைப் பொறுத்தவரையில் தமிழர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் அவை வாழ்விடங்கள். இவ்விரு இனத்தவர்களும் பேசும் மொழியால் ஒன்றுபட்டவர்கள்.

இந்த வகையில் இவ்விரு இனத்தவரும் எந்த நிலையிலும் அந்நியப்படாமல் ஒன்றுசேர்ந்து விடுதலைக்காகப் போராட வேண்டியது தவிர்க்க முடியாததாகும்.

எமது திட்டங்கள் வெற்றி பெற முஸ்லிம்களின் பங்களிப்பு மிக அவசியமானதாகும்.

இவ்வாறு அவர் கூறினார்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி செயற்குழு உறுப்பினர் திரு வாஞ்சி, திருகோணமலை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு ரூபன், ஜனாப் முகமட் மௌலவி ஆகியோரும் கூட்டத்தில் உரையாற்றினர்.

(உ—401)

# சம்பிரக் ஞானானந்த சுவாமி மறைவுக்கு ஜனாதிபதி இரங்கல் செய்தி

கொழும்பு, மே 22

இலங்கை இராமகிருஷ்ண மிஷனின் பொறுப்பாளராக விளங்கிய அதன் உப தலைவர் சம்பிரக்ஞானானந்தர் சுவாமியின் மறைவினை அறிந்த நான் ஆழ்ந்த அனுதாபம் கொண்டேன்.

இராமகிருஷ்ணமிஷன் உப தலைவர் சுவாமி சம்பிரக்ஞானானந்தாஜி மறைவு குறித்து ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாச விடுத்த இரங்கல் செய்தியில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுவாமி சம்பிரக்ஞானானந்தாஜி பொதுவாக உலக மக்கள் அனைவருக்கும் சிறப்பாக இந்த நாட்டவர்களுக்கு சேவை செய்வதற்கு என்றே தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர்.

சேவையில் அவர் கொண்டிருந்த நாட்டம் காரணமாகவும், அவருடைய தலைமைத்துவத் திறமை காரணமாகவும், 1987 ஆம் ஆண்டில் அன்னார் எங்கள் நாட்டிலுள்ள இராமகிருஷ்ணமிஷனின் பொறுப்பினை ஏற்று சேவை செய்வதற்கு நியமிக்கப்பட்டார்.

கிராம எழுச்சித் திட்ட சேவைகளுக்கு அவர் மனமுவந்து ஒத்துழைத்ததன் காரணமாக மறைந்த சுவாமிகளுடன் நான் நெருங்கிய உறவு கொண்டிருந்தேன்.

அவர் உயர் மனிதாபிமானம் கொண்டவராகவும், மிக எளிமையாகவும் வாழ்ந்தார். பல்வேறு சமய விழாக்களையும் சமூக விழாக்களையும் சிறப்பாக நடத்த ஒத்துழைப்பு வழங்கினார்.

மனித இனம் மீது அவர் கொண்டிருந்த அன்பானது இன, மத, மொழி வேறுபாடுகளை கடந்ததொன்று. அன்னாரின் மறைவு இந்த சமயத்தவர்களுக்கும் இராமகிருஷ்ணமிஷனுக்கும் பேரிழப்பாகும்.

(இ)

## ராஜாங்க அமைச்சர் பி பி தேவராஜ்

இராமகிருஷ்ண மடம், உப தலைவர் சுவாமி சம்பிரக் ஞானானந்தாவின் மறைவு குறித்து இந்துசமய, இந்து கலாசார தமிழ் அலுவல்கள் ராஜாங்க அமைச்சர் பி பி தேவராஜ் விடுத்துள்ள இரங்கல் செய்தியில், சுவாமி திடீரென்று நம்மை விட்டுப் பிரிந்து மகா சமாதியடைந்தது நமது மனதிலே பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

சுவாமி சேலத்திலிருந்த போது ஒரு புதிய ஆலயத்தை

# தொழிற்சங்கப் போட்டி இருக்கட்டும்; பொறாமை வேண்டாம்

## செல்லச்சாமிக்கு காதர் பதில்

கொழும்பு, மே 22

தொழிற்சங்கப் போட்டிகள் இருக்கலாம் ஆனால் பொறாமை இருக்கக் கூடாது அதுவும் உலகம் முழுவதும் அறிந்து கொண்டுள்ள எமது மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு அவர்களின் உரிமைக்காக நடத்தப்படும் ஒரு பூதாகாரப் போராட்டத்தை சிறு பிள்ளைத் தனமாக மூடி மறைக்க முயலும் அளவுக்குப் பொறாமை இருக்கக் கூடாது.

இப்படி மலையக மக்கள் முன்னணியின் செயலதிபர் ஜனாப் பூ அ காதர் தெரிவித்திருக்கிறார்.

கைதான மலையக மக்கள் முன்னணித் தலைவர் திரு பி சந்திரசேகரனை விடுவிப்பதற்கு மேற்படி முன்னணி நடத்திய போராட்டம் தொடர்பாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு எம எஸ் செல்லச்சாமி கடந்த ஞாயிற்றுக்கிழமை சிந்தாமணிக்குத் தெரிவித்தார் அல்லவா?

"தோட்டப் பகுதிகள் வழமைக்குத் திரும்பின" என்ற தலைப்பில் அவர் தெரிவித்த கருத்துக்கள் சிந்தாமணியில் வெளியிடப்பட்டிருந்தன.

"நுவரெலியா மாவட்டத்தில் 10,000 தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர் என்று வந்த செய்தி ஆதாரமற்றது. சுமார் 2000 பேரே வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்டனர். இப்போது (19—5—90) வேலை நிறுத்தம் கைவிடப்பட்டு தோட்டப் பகுதிகள் வழமைக்குத் திரும்பியுள்ளன என்று திரு செல்லச்சாமி கருத்துத் தெரிவித்தார்.

அதற்குப் பதில் அளிக்கும் விதத்தில் ஜனாப் காதர் தாம் விடுத்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

அவர் தனது அறிக்கையில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது—

மலையகத்தில் அரசியல்வாதிகளும், தொழிற்சங்க பிரமுகர்களும், இளைஞர்களும் அடிக்கடி கைது செய்யப்பட்டு வருவது அன்றாட நிகழ்ச்சியாகி விட்டது. இந்த அடக்கு முறைக்கு எதிராக அரசோடு இணைந்து தொண்டிருக்கும் தொழிற்சங்கங்கள் எவ்வித செயற்பூர்வமான நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் மறைமுகமாக அரசுக்கு ஒத்துழைப்பு நல்கி வருவது சகலரும் அறிந்த விடயமாகும்.

எமது அமைப்பாளர்கள் பலர் இதுவரை கைதாகி பின்னர் நிரபராதிகள் எனக் காணப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

திரு அருள்மொழி வர்மன், நுவரெலியா அமைப்பாளர் ஒரு வருடத்திற்கு மேலாக விசாரணையின்றி சிறையில் கிடந்து வாடுகிறார்.

இவ்வாறு எம்மை முளையிலே அழித்துவிட முயலும் திட்டத்தின் உச்சக்கட்டமாக எமது தலைவர் திரு பீ சந்திரசேகரன் சாங்கத மருத்துவமனையில் சிகிச்சை அளிக்க மறுக்கப்பட்டது.

மறுநாள் 17 ஆம் திகதி பல தோட்டங்களுக்கு வேலை நிறுத்தம் பரவியது சுமார் 60,000 பேர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

இத்தினங்களில் பொலீஸார் வாகனங்களில் போய் தொழிலாளர்களை வேலை நிறுத்தத்தில் ஈடுபட வேண்டாம் என அச்சுறுத்தினர்.

அரசாங்க சார்பு தொழிற்சங்கம் ஒன்றின் பிரமுகர்கள் தோட்டம் தோட்டமாகப் போய் தமது அங்கத்தவர்களை வேலை நிறுத்தத்தில் ஈடுபடாமல் தடுக்க சகல முயற்சிகளையும் மேற்கொண்டனர்.

எனினும் சங்க வேறுபாடுகளை மறந்து உணர்வு பூர்வமாக தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தைத் தொடர்ந்தனர்.

அன்றைய தினம் திரு சந்திரசேகரன் விடுதலை செய்யப்படுவார் என பொலீஸார் வாக்குறுதி அளித்தனர். அதைத் தொடர்ந்து திரு சந்திரசேகரன் பொலீஸ் நிலையத்தில் இருந்து வேலை நிறுத்தத்தைக் கைவிடுமாறு தொலைபேசி மூலம் வேண்டுகோள் விடுத்தார்.

அதனை அடுத்து 18 ஆம் திகதி (மறுநாள்) வேலை நிறுத்தத்தைத் தொடர வேண்டாம் என எம்மால் சுற்று நிருபம் ஒன்று தோட்டங்களுக்கு அனுப்பப்பட்டது.

எனவே வேலை நிறுத்தம் 18 ஆம் திகதி முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. எனினும் சுற்று நிருபம் கிடைக்காத தோட்டங்களைச் சேர்ந்த சுமார் 10,000 பேர் 18 ஆம் திகதியன்றும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தனர்.

பொலீஸார் வாக்குறுதியளித்தவாறு திரு சந்திரசேகரன் 17 ஆம் திகதி விடுதலை செய்யப்படவில்லை அதனால் 18 ஆம் திகதி முதல் 20 பேர் தலவாக்கொல்லையில் சாகும்வரை உண்ணாவிரதத்தில் ஈடுபட்டனர்.

அட்டன் வெலிஓயாவில் சுமார் 200 பேர் சத்தியாக்கிரகம் மேற்கொண்டனர்.

பொலீஸ் சுப்ரின்டன் திரு நிமால் லெவ்கே நாளை (21 ஆம் திகதி) திரு சந்திரசேகரனை நீதிமன்றத்தில் விடுதலை செய்வதாக உறுதியளித்துள்ளதைத் தொடர்ந்து உண்ணாவிரதம் ஏனைய இடங்களுக்கு பரவாமல் தடுக்கப்பட்டது நாம் தடுத்து விட்டோம். இவ்வறிக்கையை எழுதும் போது (20 ஆம் திகதி) தலவாக்கொல்லை பாமஸ்ட்ரன் தோட்டம், மன்றின் தோட்டம் ஆகிய

# மலையகத்திலிருந்து 1 லட்சம் பேரை நாடு கடத்துவது தமிழ் பேசும் மக்களை பலவீனப்படுத்தும் முயற்சி

ளோம்.

குடியேற்றங்கள் பற்றித் தீர்மானிக்க ஒரு குழுவை அமைப்பதாக எமக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சுய நிர்ணய உரிமை

இலங்கையில் வடக்கு - கிழக்கில் வாழுகின்ற தமிழ் பேசும் இனமாகிய எமக்கு தனித்துவமான தேசியத் தன்மைகள் நிறையவுண்டு.

தேசியத் தன்மையுள்ள எந்தவொரு இனமும், தனது சுய நிர்ணய உரிமையைப் பயன்படுத்தி பிரிந்து போக விரும்பின் அதற்கு அமைதி வழங்க வேண்டியது அந்த நாட்டு அரசினது கடமையாகும்.

அதன் அடிப்படையில் நாம் வாழும் பகுதியில் சுதந்திரமான தொரு ஆட்சியை ஏற்படுத்த நாம் முனைந்துள்ளோம்.

எமது இந்த முயற்சியை நிலைகுலையச் செய்வதற்கு மழுங்கடிக்கச் செய்யும் இலங்கை அரசு, இந்திய அரசும் பல தந்திரோபாயங்களைக் கையாண்டு தோல்வியடைந்துள்ளன.

### அரசுகள் தோல்வி

வடக்கு - கிழக்கில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம்,

---

## பெற்றோல் டிரக் வெடித்ததால் 16 பேர் பலி

புதுடில்லி, மே 22

வட இந்தியாவில் பெற்றோல் ஏற்றிச் சென்ற டிரக் கொன்று வெடித்ததால் 16 பேர் பலியானார்கள்.

இந்தச் சம்பவத்தில் 15 பேர் காயமடைந்ததாகவும் அறிவிக்கப்படுகிறது.

மீரார் மாநிலத்தில் ஷசாரி பாக் நகருக்கருகே விபத்து சம்பவித்தது- (எ)

---

# நாடு கடத்துவது தமிழ் பேசும் மக்களை பலவீனப்படுத்தும் முயற்சி

## ஈழவர் ஜனநாயக முன்னணி கண்டனம்

கொழும்பு, மே 22

மலையகத்தில் இருந்து சுமார் 1,00,000 பேரை இந்தியாவுக்கு நாடு கடத்த அரசு எடுக்கும் நடவடிக்கை தமிழ் பேசும் மக்களைப் பலவீனப் படுத்தும் முயற்சி என்று ஈழவர் ஜனநாயக முன்னணி (ஈரோஸ்) கண்டித்திருக்கிறது-

மேற்படி முன்னணி வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது-

மலையக மக்கள் தொடர்பாக இலங்கை - இந்திய அரசுகள் செய்து கொண்ட உடன்பாடுகள் எதுவும் இந்த மக்களின் சம்மதத்தை பெற்றவை அல்ல-

1964 இன் ஸ்ரீமா சாஸ்திரி ஒப்பந்தமும், 1974 இன் ஸ்ரீமா—இந்திரா ஒப்பந்தமும் காலாவதியாகிவிட்டன-

1987 இல் இலங்கை - இந்திய உடன்பாடு கூட செல்லுபடியற்றதாகியுள்ள இன்றைய சூழ்நிலையில் மலையக மக்களை நாடு கடத்த எடுக்கும் முயற்சி எந்தச் சட்ட வரையறைக்கும் உட்பட்டதாகக் கருத முடியாது-

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களை கூறுபோட பிளவுபடுத்தி பலவீனப்படுத்த அரசு எடுக்கும் முயற்சியின் ஓர் அம்சமாகவே மலையக மக்களை நாடு கடத்த எடுக்கும் தீர்மானம் அமைகிறது- இத்தகைய முயற்சிகள் நாட்டில் ஏற்பட்டு வரும் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மை என்பவற்றை கேள்விக்குள்ளாக்கும்-

நாட்டு மக்களின் அடிப்படை ஜீவாதார, நலன்களுக்கு எதிரானவையாகவும் அமையும்-

மலையக மக்களை நாடு கடத்த எடுக்கும் முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் மலையக அரசியல்வாதிகள் தொழில் சங்கத் தலைவர்கள் மற்றைய சமூக உணர்வுள்ள இளைஞர்களுக்கு எதிராக பொலீஸ் மற்றும் இராணுவத்தை ஏவி விடும் செயல் பொருத்தமான அணுகுமுறை அல்ல என்பதை சம்பந்தப்பட்டவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்-

கலந்துரையாடல், கருத்தொருமித்தல் என்பவற்றின் மூலம் நல்இணக்கம் காண முனையும் ஜனாதிபதி ஒரு லட்சம் மலையக மக்களின் பிரச்சினையை இனவாத அரசியலுக்கு அப்பாற்பட்டு மனிதாபிமான நோக்கில் அணுக வேண்டும் என்ற வேண்டுகோளை விடுக்கின்றோம்-

இப்படி அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது- (உ)

---

கவலையை ஏற்படுத்தியுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

சுவாமி சேலத்திலிருந்த போது ஒரு புதிய ஆலயத்தை அங்கே கட்டுவதற்கும் இலவச வைத்தியசாலையை நிறுவவும் வழிசெய்தார். இலங்கையிலும் அவர் ஆற்ற வேண்டிய பணிகள் பற்றி நிறையவே பேசுவார். ஆனால் அவை செயல் வடிவம் பெறும் முன்பே அவர் சமாதி அடைந்தமை துயரம் தருவதாகும்.

அன்னாரின் ஆத்மீகப் பணிகளை முன்னெடுத்துச் செல்வதே நாம் அவருக்கு ஆற்றும் பெரும் அஞ்சலியாக அமையும்.

இப்படி அவர் தமது செய்தியில் குறிப்பிட்டிருக்கிறார், (உ)

---

கொண்டிருக்கிறார்-

இவ்வாறு எமமை முளையிலே அழித்துவிட முயலும் திட்டத்தின் உச்சக்கட்டமாக எமது தலைவர் திரு பீ சந்திரசேகரன் கடந்த 15 ஆம் திகதி பொலீஸாரால் கைது செய்யப்பட்டார்-

செய்தி பரவியதும் தலவாக்கொல்லை, அக்கரபத்தனை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சுமார் 50,000 பேர் மறுநாள் 16 ஆம் திகதி முதல் வேலை நிறுத்தத்தில் குதித்தனர்- அத்துடன் தலவாகொல்லை கதிரேசன் கோயிலுக்கு பிரார்த்தனை இயக்கம் நடத்துவதற்காகவும், நூற்றுக்கணக்கானோர் படையெடுத்தனர்

அன்று பொலீஸார் மேற்கொண்ட தடியடிப் பிரயோகத்தில் பெண்கள் உட்பட பலர் காயமுற்றனர்- இவர்களுக்கு அர

---

றோம்- இவ்வறிக்கையை எழுதும் போது (20 ஆம் திகதி) தலவாக்கொல்லை பாமஸ்டன் தோட்டம், மன்றீன் தோட்டம் ஆகிய இடங்களில் சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது-

நாளை (21 ஆம் திகதி திங்கள்) திரு சந்திரசேகரன் விடுதலை செய்யப்படாவிட்டால் போராட்டம் தீவிரமடையும்-

இதுவே உண்மை நிலை- அரசின் திரு செல்லச்சாமி இப் போராட்டத்தில் ஈடுபட்ட ஆயிரமாயிரம் தொழிலாளர்களின் மனம் புண்படும் விதத்திலும் இப் போராட்டம் முக்கியத்துவம் வாய்ந்த போராட்டத்தை கொச்சைப் படுத்தும் வகையிலும் அறிக்கை விடுத்துள்ளார்-

அரசின் இந்த ஜனநாயக விரோத நடவடிக்கையை கட்சி மற்றும் தொழிற்சங்க பேதங்களை மறந்து எல்லோரும் ஒன்று பட்டு எதிர்த்து நிற்க வேண்டிய இச்சமயத்தில்-

பல்வேறு அமைப்புகள் இதனை ஒரு பொதுப் பிரச்சினையாகக் கருதி கண்டனம் தெரிவிக்கும் இவ்வேளையில்—

ஒரு பிரபல தொழிற்சங்கத்தின் பொதுச் செயலாளராக இருந்து கொண்டு திரு எம் எஸ் செல்லச்சாமி அந்த அறிக்கையை விடுத்திருப்பது எமக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது-

தொழிற்சங்க போட்டிகள் இருக்கலாம் ஆனால் பொறாமை இருக்கக் கூடாது- அதுவும் உலகம் முழுவதும் அறிந்த கொண்டுள்ள எமது மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு அவர்களின் உரிமைக்காக நடத்தப்படும் ஒரு [illegible] போராட்டத்தை சிறு பிள்ளைத்தனமாக மழுங்கடிக்க முயலும் அளவுக்கு பொறாமை இருக்கக் கூடாது-

இப்படி ஊவாப் பிரதேசத் தமது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்- (உ)

---

# எதுவித இந்தியத் தொடர்பும் இல்லாதவர்களை இந்தியாவுக்கு அனுப்புவதா? ஐ. தோ. தொ. ச. கேள்வி

கொழும்பு, மே 22

26 வருடங்களுக்கு முன்னர் சம்பந்தப்பட்ட எவரையும் கலந்து ஆலோசிக்காமல் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்த அடிப்படையில் இந்திய கடவுச் சீட்டுப் பெற்றவர்களில் பலர் காலமாகி விட்டார்கள்-

அன்று பிள்ளைகளாக இருந்தவர்கள் இன்று பெரியவர்களாகி குடும்பஸ்தர்களாகவும் மாறிவிட்டார்கள்- அவர்களுக்கு இந்தியத் தொடர்பு எதுவும் இல்லை- அவர்களை இந்தியாவுக்கு நாடு அனுப்புவதா?

மேற்கண்டவாறு ஐக்கிய தோட்டத் தொழிலாளர் சங்கம் கேட்கிறது-

அண்மையில் மேற்படி சங்கப் பொதுச்சபை அதன் தலைவர் திரு எஸ் நடேசன் தலைமையில் கூடி இந்த விடயத்தை ஆராய்ந்தது-

பொதுச் சபை விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது-

1964 ஆம் ஆண்டில் கைச்சாத்தான ஸ்ரீமாசாஸ்திரி ஒப்பந்தமும், 1974 ஆம் ஆண்டு கைச்சாத்தான ஸ்ரீமா—இந்திரா ஒப்பந்தமும் சுமார் 10 லட்சம் நாடற்ற மக்களை மனிதாபிமானமற்ற முறையில் பிரித்து விட்டன-

மலையகத் தமிழ் மக்களையோ அல்லது அவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்கங்களையோ கலந்தாலோசிக்காது செய்யப்பட்ட ஒப்பந்தங்கள் இவை-

இந்நாட்டில் அவ்வப்போது தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட இனக்கலவரங்கள், விசேடமாக தோட்டங்கள் தேசியமயமாக்கப்பட்டதால் ஏற்பட்ட பின் விளைவுகள், இலங்கை பிரசாவுரிமை கோரிச் செய்யப்பட்ட விண்ணப்பங்களின் நிராகரிப்பு போன்ற இன்னோரன்ன காரணங்களினாலேயே ஆயிரக் கணக்கான தோட்டத் தொழிலாளர்களும் அவர்களைச் சார்ந்தோரும் இந்தியக் குடியுரிமை கோரி விண்ணப்பிக்க நிர்ப்பந்திக்கப்பட்டனர்-

சர்வதேச மனித உரிமை சாசனத்தின் 15ஆவது சரத்தின்படி ஒரு நாட்டின் பிரசையாக இருந்து அதை வாபஸ் செய்து இன்னொரு நாட்டின் பிரசையாவதற்கு உரிமையுண்டு-

ஸ்ரீமா சாஸ்திரி ஒப்பந்தம் கைச்சாத்தாகி இன்றுடன் இருபத்தாறு வருடங்கள் கடந்து விட்டன-

இவ்வொப்பந்த அடிப்படையில் கடவுச் சீட்டு பெற்ற பலர் காலமாகி விட்டார்கள்-

அன்று பிள்ளைகளாக இருந்த அவர்கள் இன்று பெரியவர்களாகி குடும்பஸ்தர்களாகவும் மாறி விட்டனர்-

அவர்களுக்கு எதுவிதமான இந்திய தொடர்பும் இல்லை-

ஆகவே கடவுச்சீட்டு பெற்றவர்களும் இந்திய குடியுரிமைக்கு விண்ணப்பித்தவர்களும் இலங்கையில் தொடர்ந்து வாழ விரும்பினால் அவர்களுக்கு மனிதாபிமான முறையில் இலங்கை பிரசாவுரிமை வழங்கப்பட வேண்டும்- அதேவேளை தாமாகவே இந்தியா செல்ல விரும்புபவர்கள் இந்தியா செல்வதற்கு சகல வசதிகளையும் அளிக்க வேண்டும்-

இது சம்பந்தமாக இலங்கை இந்திய அரசுகள் உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்-

இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது- (உ)

சிங்கப்பூர் குடியரசின் 25 ஆவது ஆண்டு பூர்த்தி

# இலங்கை ஹொக்கி குழு சிங்கப்பூர் செல்லும்

## சர்வதேசபோட்டிக்கு அழைப்பு

கொழும்பு, மே 22

இலங்கை ஹொக்கி விளையாட்டு வீரர்கள் சிங்கப்பூரில் நடக்கவிருக்கும் சர்வதேச போட்டியில் கலந்து கொள்ள அழைக்கப்பட்டிருக்கிறார்கள் — சிங்கப்பூரின் குடியரசின் 25 ஆவது ஆண்டு பூர்த்தியை ஞாபகப்படுத்தும் நோக்கத்துக்காக மேற்படி போட்டி நடக்க உள்ளது- இது சர்வதேச அழைப்பின் அடிப்படையில் நடக்கவிருக்கும் ஹொக்கி சுற்றுப் போட்டியாகும்-

இந்த வருடம் ஆகஸ்ட் மாதம் 21 ஆம் திகதியிலிருந்து 25 ஆம் திகதி வரை நடக்கவிருக்கும் இச்சுற்றாட்டத்திற்கு இலங்கையும் அழைக்கப்பட்டுள்ளது- இப்போட்டியில் பங்குபற்றவிருக்கும் ஏனைய நாடுகளுள் மலேஷியா, தாய்லாந்து, ஹொங்கொங், புறூனி, இந்தோனேஷியா மற்றும் மக்கா ஆகியவையும் அடங்கும்-

இந்தப் போட்டியில் பங்குபற்றும் இலங்கை ஹொக்கி ஆட்டக்காரர்களுக்கு ஒரு புது அனுபவமும் காத்திருக்கிறது. இவர்கள் செயற்கையான விளையாட்டு தரையிலும் ஒளி வெள்ளத்திலும் விளையாடி அனுபவம் பெறப் போகிறார்கள்- இது ஒரு நல்ல சந்தர்ப்பமாகும்-

இப்போட்டி முடிவடைந்ததும் இலங்கை ஹொக்கி அணி மலேஷியா சென்று அங்கும் சில ஆட்டங்களில் பங்குபெறலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது-

இதே நேரத்தில் இலங்கை ஹொக்கி சம்மேளனம் மேற்படி பயணங்களுக்கான செலவுகளைத் தாக்குப் பிடிக்க ஹொக்கி ஆதரவாளர்களின் தாராள மனத்தை எதிர்பார்க்கிறது- (ரி)

## திரித்துவ கல்லூரி வென்றது

மடவளை, மே 21

"மைலோ" கிண்ணத்திற்கான றகர் போட்டியில் திரித்துவக் கல்லூரி வெற்றி பெற்றது-

அண்மையில் லோங்டன் பிளேஸில் நடைபெற்ற மேற்படி போட்டியில் திரித்துவக் கல்லூரி தேர்ஸ்டன் கல்லூரியை 10—6 என்ற புள்ளி வித்தியாசத்தில் வெற்றியீட்டியது- [ரி—431]

உலக டெனிஸ் வீராங்கனை

## ஸ்டெபி கிராப் இறுதி ஆட்டத்தில் தோல்வி

மேற்கு பேர்லின், மே 22

உலக டெனிஸ் வீராங்கனை ஸ்டெபி கிராப் 16 வயதான யூகோஸ்லாவிய வீராங்கனை மொனிக்கா செலஸிடம் தோல்வியுற்றார்-

மேற்கு பேர்லின் மகளிர் டெனிஸ் போட்டியின் இறுதி ஆட்டத்திலேயே ஸ்டெபியை மொனிக்கா சந்தித்தார்- இருவருக்குமிடையே 64 நிமிடங்களாக நடைபெற்ற பரபரப்பான ஆட்டத்தில் ஸ்டெபியை அவர் 6–4, 6–3 என்ற ரீதியாகத் தோல்வி அடையச் செய்தார்-

இப்போது மூன்றாம் வரிசையில் இருந்து வரும் மொனிக்கா இத்தாலிய பகிரங்க டெனிஸ் ஆட்டத்தில் 6–1, 6–1 என்ற ரீதியாக பலம் பொருந்திய மார்டினா நவரட்டிலோவாவைத் தோற்கடித்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது-

பிரெஞ்சு பகிரங்க போட்டியில் கலந்து கொள்ள ஒரு வாரம் இருக்கையிலேயே ஸ்டெபி கிறாப் இத் தோல்வியைச் சந்தித்துள்ளார்- [illegible] தான் கலந்து கொண்ட 66 டெனிஸ் போட்டிகளில் தொடர்ந்து வெற்றியை மட்டுமே சந்தித்து வந்த இவர் இப்போதே முதல் தடவையாக தோல்வி அடைந்திருக்கிறார்-

மொனிக்காவுடன் ஆடுவது [illegible] என்று ஸ்டெபி ஆட்ட முடிவில் தெரிவித்தார்- (ரி—032)

## ஆவிரி கிரிக்கெட் அணியின் வெற்றி

வறக்காப்பொளை, மே 21

இருபத்து மூன்று பிரபல கிரிக்கெட் அணிகளுக்கிடையே நடைபெற்ற கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் மாவனல்லை ஆவிரி விளையாட்டுக் கழகம் இறுதிப் போட்டியில் வென்று சாம்பியனாகியது.

"ஆவிரி" சவால் கிண்ணத்திற்காக நடைபெற்ற இக் கிரிக்கெட் சுற்றுலாவின் இறுதிப் போட்டியில் றம்புக்கணை சமனல அணியுடன் ஆவிரி மோதி வென்றே சாம்பியனாகியது- 25 ஓவர் போட்டியாக நடைபெற்ற பிரஸ்தாப சாம்பியன் தெரிவுப் போட்டியில் 28 ஓட்டங்களால் ஆவிரி அணி வென்றது

மாவனல்லை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இச் சுற்றுப் போட்டியின் போது தேகாலை, றம்புக்கணை, மாவனல்லை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 23 பிரபல கிரிக்கெட் அணிகள் பங்குபற்றின- [ரி—333]

## டெவோன் பதில் ஆட்டக்காரர்

லண்டன், மே 22

வேகப் பந்து வீச்சாளர் டெவோன் மல்கோம் இங்கிலாந்து அணியில் காயமடைந்த அங்குஸ் ஃப்ரேசரின் இடத்தை ஏற்றுள்ளார்-

விலா எலும்பை அண்டிய தசையில் ஏற்பட்ட காயத்தால் வேகப் பந்தாளர் ஃப்ரேசர் விளையாட்டிலீடுபட முடியவில்லை இங்கிலாந்து - நியூசிலாந்து இரண்டு ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் ஆட்டங்களில் ஈடு கொடுக்க முடியாத நிலைக்கு ஆளான இவரின் இடத்தையே மல்கோம் ஏற்றுக் கொண்டார்.

இங்கிலாந்துக்கும் மேற்கிந்தியத் தீவுகளுக்கும் இடையில் இவ்வருடம் நடந்த சர்வதேச கிரிக்கெட் தொடர் ஆட்டங்களில் 27 வயதான மல்கோம் 19 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். அப்படியிருந்தும் அங்கு நடந்த ஆறு ஒரு நாள் சர்வதேச ஆட்டங்களுக்கு இவர் தெரிவு செய்யப்படவில்லை [ரி]

# விளையாட்டு பகுதி

## நஷ்டஈடு கோரும் ஹரி வில்சன்

புதுடில்லி, மே 22

இந்திய விளையாட்டுத் துறை அதிகார சபையிடம் நஷ்டஈடு கோரி வழக்கு தொடரப் போவதாக இங்கிலாந்தின் பிரபல மைதான ஆட்ட பயிற்றுவிப்பாளர் ஹரி வில்சன் தெரிவித்து மேற்படி சபை மீது நோட்டீஸ் பிறப்பித்துள்ளார்-

தனது வருமானம் பாதிக்கப்படும் வகையில் மேற்படி சபை நடந்து கொண்டிருப்பதால் 22 ஆயிரம் டாலர் நஷ்டஈடு கோரப் போவதாக இவர் தெரிவித்துள்ளார்.

ஆசியான் போட்டிக்கான இந்திய ஓட்ட மற்றும் பாய்ச்சல் வீரர்களை இவர் 1988 ஆம் ஆண்டு முதல் பயிற்றுவித்து வருகிறார்- இந்தியாவின் விளையாட்டு தரத்தை உயர்த்தி ஆசியான் போட்டியில் இந்திய வீரர்களை முன்னணி வகிக்கச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடனேயே இந்திய விளையாட்டுத்துறை ஆதி... உத்தியோகபூர்வமாக ரத்துச் செய்யப்படவில்லை என்று கூறியுள்ளதோடு ஏப்ரல் மாதம் இங்கு வர வேண்டாம் என்று மட்டுமே தாம் அவரிடம் கேட்டுக் கொண்டதாகவும் விளக்கமளித்துள்ளது- [ரி—032]

## உதைபந்து பயிற்சி

கொழும்பு, மே 22

உதைபந்தாட்டத் துறையின் உயர் தொழில் நுணுக்கங்களைத் தெரிந்து கொள்ளும் பொருட்டு மூன்று உதைபந்தாட்ட பயிற்றுவிப்பாளர்கள் மலேஷியா சென்றுள்ளனர்-

எட்வர்ட் ஜயவர்தன, எம் ஜீவரட்ணம், எம் ஐ எல் மொஹிதீன் ஆகிய மூவரே உயர் பயிற்சி பெறும் பொருட்டு மலேஷியா பயணமாகியுள்ளனர்- [ரி—032]

## பதுளை மாவட்ட கரப்பந்து போட்டி

பதுளை, மே 21

பதுளை மாவட்ட பிரதேசங்களுக்கிடையே நடைபெற்ற கரபந்தாட்ட போட்டிகளில் ஊகலை பிரதேசம் சாம்பியனானது-

பதுளை பொது விளையாட்டு மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற மேற்படி போட்டிகளில் 12 கோஷ்டிகள் கலந்து கொண்டன-

இறுதிப் போட்டியில் ஊகலை கோஷ்டி கெந்தகொல்ல கோஷ்டியை 15—3, 15—6 என்ற புள்ளி வித்தியாசத்தில் தோற்கடித்துச் சாம்பியனானது-

இப் போட்டிக்கு திருவாளர்கள் சி ஏ பீ மாரசிங்க, அனுர டி சில்வா ஆகியோர் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றினர்- [ரி—037]

## வானொலி

23—5—1990

காலை —

5–00 நாதாஞ்சலி
5–05 தோத்திரமாலை - ஒப்பிலியப்பன் சுப்ரபாதம்
5–30 பாமாலை - ஆழ்வார் திருப்பாசுரம்
5–45 சைவநற்சிந்தனை
5–50 இஸ்லாமிய நற்சிந்தனை
5–55 [illegible]

24—5—1990

காலை —

5–00 நாதாஞ்சலி
5–05 தோத்திரமாலை - பார்த்தசாரதி சுப்ரபாதம்
5–30 சாயி பஜன்
5–45 சைவநற்சிந்தனை
5–50 இஸ்லாமிய நற்சிந்தனை மௌலவி எச் ஓமர்தீன்
5–55 பக்திப்பாடல்
6–00 வர்த்தகசேவை
6–30 செய்திகள்
6–40 செய்தித்தாள் கண்ணோட்டம்
6–50 அறிவிப்புகள்
7–00 வர்த்தகசேவை

... பவர்- கலாநிதி அல்ஹாஜ் எம் ஏ எம் சுக்ரி
8–50 இஸ்லாமிய கீதம்
8–55 வரலாற்றில் ஓர் ஏடும் குறிப்பும் ஸலவாத்தும்
9–00 செய்திகள்
9–10 அறிவிப்புகள்
9–20 பக்திப்பாடல்கள்
9–30 கலந்துரையாடல்— சமூக வளர்ச்சியில் சிக்கனத்தின் பங்களிப்பு
10–00 இசைக் கச்சேரி ஜீ சண்முகானந்தம்
11–00 ஒலிபரப்பு முடிவு

## விமான சேவைகள்

மே 23 (புதன்கிழமை)

1000 குவைத், அபுதாபி யூ எல் 224
1025 [illegible]

## மே 23 (புதன்கிழமை)

### வந்து சேரும் நேரம்

| | | | |
|---|---|---|---|
| 0540 | றியாத் | யூ எல் | 272 |
| 0635 | குவைத் | கே யூ | 361 |
| 0650 | லண்டன், டுபாய் | யூ எல் | 504 |
| 0710 | சிப்பல், தஹ்ரேன் கராச்சி | கே எல் | 801 |
| 0745 | ஜித்தா, தஹ்ரேன், றியாத் | எஸ் சி | 346 |
| 0845 | டுபாய், மாலைதீவு | ஈ கே | 802 |
| 1120 | திருவனந்தபுரம | யூ எல் | 162 |
| 1225 | பாங்கொக் | ரி ஜி | 307 |
| 1345 | மாலைதீவு, டுபாய் | ஈ கே | 803 |
| 1545 | சென்னை | யூ எல் | 122 |
| 2005 | சிங்கப்பூர் | யூ எல் | 303 |
| 2025 | மாலைதீவு | யூ எல் | 102 |
| 1030 | குவைத், அபுதாபி | யூ எல் | 224 |
| 1025 | ஹம்ஸ்டர்டேம, டஸ்கா பேர்க், மியூனிச் | எல் ரி | 724 |
| 1040 | சோபியா, டுபாய் | எல் இசட் | 581 |
| 1055 | திருச்சி | யூ எல் | 132 |
| 1130 | பிராங்க்போர்ட், மாலைதீவு | டி எப் | 3540 |
| 1140 | சென்னை, திருவனந்தபுரம | ஐ சி | 573 |
| 1325 | மாலைதீவு | யூ எல் | 102 |
| 1355 | கராச்சி. மாலைதீவு | பி கே | 776 |
| 1415 | மாஸ்கோ, டுபாய் | எஸ் யூ | 545 |
| 1500 | திருவனந்தபுரம, திருச்சி | ஐ சி | 507 |
| 1530 | சென்னை | யூ எல் | 122 |
| 1800 | திருச்சி, சென்னை | ஐ சி | 577 |
| 2005 | ரொரிடா, புக்கியோகா | யூ எல் | 457 |
| 2355 | ஹொங்கொங், பாங்கொக் | யூ எல் | 423 |

### புறப்படும் நேரம்

| | | | |
|---|---|---|---|
| 0125 | டுபாய், சூரிச், பாரிஸ் | யூ எல் | 523 |
| 0750 | குவைத் | கே யூ | 361 |
| 0830 | திருவனந்தபுரம | யூ எல் | 161 |
| 0915 | ஜித்தா, தஹ்ரேன், றியாத் | எஸ் வி | 346 |
| 0930 | சிங்கப்பூர் | யூ எல் | 302 |
| 0950 | டுபாய், மாலைதீவு | ஈ கே | 802 |
| 1215 | சென்னை | யூ எல் | 121 |
| 1325 | பாங்கொக் | ரி ஜி | 307 |
| 1450 | மாலைதீவு, டுபாய் | ஈ கே | 803 |
| 1755 | பமபாய், கராச்சி | யூ எல் | 181 |
| 1905 | கராச்சி, தஹ்ரேன் சிப்பல் | கே எல் | 802 |
| 1920 | அபுதாபி, குவைத் | யூ எல் | 223 |
| 1930 | மாலைதீவு | யூ எல் | 101 |
| 2115 | புக்கியோகா, நொரிடா | யூ எல் | 456 |

## மே 24 (வியாழக்கிழமை)

### வந்து சேரும் நேரம்

| | | | |
|---|---|---|---|
| 0535 | கராச்சி, பமபாய் | யூ எல் | 182 |
| 0710 | பாரிஸ், சூரிச், டுபாய் | யூ எல் | 524 |
| 0800 | டுபாய் | ஈ கே | 800 |

### புறப்படும் நேரம்

| | | | |
|---|---|---|---|
| 0130 | டுபாய், லண்டன் | யூ எல் | 503 |
| 0805 | திருச்சி | யூ எல் | 131 |
| 0845 | பாங்கொக், ஹொங்கொங் | யூ எல் | 422 |
| 0915 | டுபாய் | ஈ கே | 800 |
| 0930 | மாலைதீவு | யூ எல் | 101 |
| 1155 | ஹம்ஸ்டர்டேம், டஸ்கா பேர்க் மியூனிச் | எல் ரி | 724 |
| 1200 | சென்னை | யூ எல் | 121 |
| 1245 | பிராங்க்போர்ட், மாலைதீவு | பி எப் | 3540 |
| 1235 | சென்னை, திருவனந்தபுரம | ஐ சி | 573 |
| 1505 | கராச்சி, மாலைதீவு | பி கே | 776 |
| 1615 | மாஸ்கோ. டுபாய் | எஸ் யூ | 545 |
| 1540 | திருவனந்தபுரம திருச்சி | ஐ சி | 507 |
| 1820 | தோஹா | யூ எல் | 261 |
| 1840 | திருச்சி, சென்னை | ஐ சி | 577 |

குறிப்பு;— யூ எல் — எயர் லங்கா, ஐ சி — இந்தியன் எயர் லைன்ஸ், ஈ கே — எமிரேட்ஸ், எஸ் யூ — ஏரோபுளொட், ஜீ எப் — கல்ப் எயர், யூ டி — யூ டி ஏ டி எப் — கொண்டோர் எஸ் கியூ — சிங்கப்பூர் எயர் லைன்ஸ், பி கே — பாகிஸ்தான் இன்டர்நேஷனல் எயர் லைன்ஸ் கே யூ — குவைத் எயர்வேய்ஸ். எஸ் வீ — சவூதியா, எஸ் டி — ஸ்டேர்லிங் எயர் லைன்ஸ், டி ஜி — தாய் எயர் வேய்ஸ். பி பி — பால் எயர், எல் இஸட் — பிரத்தியேக சேவை, எல் டி — பிரத்தியேக சேவை, — டி கே பிரத்தியேக சேவை. — கே எல் — றோயல் எயர் லைன்ஸ்.

விமான சேவைகள் மாற்றம பற்றி அறியத் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம 452218, [விமான நிலையம்]

முன்னணி வகிக்கச் செய்ய வேண்டும என்ற நோக்கத்துடனேயே இந்திய விளையாட்டுத்துறை அதிகார சபை ஹரி வில்சனின் சேவையைப் பெற்றுக் கொண்டது-

ஆனால் கடந்த ஏப்ரல் மாதம தமது பயிற்சியை மீண்டும இந்தியாவில் ஆரமபிக்கும பொருட்டு இவர் இங்கிலாந்தில் இருந்து பயணமாகவிருந்த போது இந்தியாவுக்கு வர வேண்டாம என்று மேற்படி அதிகார சபை அவசர வேண்டுகோள் விடுத்தது-

இது அடுத்தே இந்தியாவின் நடவடிக்கை ஒப்பந்தத்தை மீறுவதாக அமைந்துள்ளது என்று தெரிவித்துள்ள வில்சன் தான் சட்ட நடவடிக்கை எடுக்கவிருப்பதாகக் கூறியுள்ளார்-

ஆனால் இந்திய சபையோ வில்சனுடனான ஒப்பந்தம் இன்னும

## காட்டு யானைகள் கொல்லப்பட்டன

கொழுமபு, மே 21

கடந்த 6 மாதங்களுக்குள் மட்டும 32 காட்டு யானைகள் கொல்லப்பட்டுள்ளன.

இதனை வனபரிபாலன திணைக்களப் பணிப்பாளர் கலாநிதி சரத் கொடகம தெரிவித்துள்ளார்.

சில இடங்களில் போக்குவரத்து நெருக்கடிகள் காரணமாக சரியான புள்ளி விவரங்களைப் பெற முடியாது உள்ளது.

கூடுதலான யானைகள் ஹூங்கல, குமண பகுதிகளில் தான் துப்பாக்கிகளால் சுட்டுக் கொல்லப்பட்டு உள்ளன.

குறுகிய காலத்தில் இவ்வளவு யானைகள் கொல்லப்பட்டதற்கான காரணம என்னவென்று தெரியவில்லை. இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

வனவிலங்குகளிடம இருந்து உற்பத்திகளுக்கு ஏற்படும ஆபத்தைத் தவிர்ப்பதற்குத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இத் திட்டம விரைவில் நடைமுறைக்கு வரவுள்ளதும குறிப்பிடத்தக்கது. (இ-007)

5-45 சைவநற்சிந்தனை
5-50 இஸ்லாமிய நற்சிந்தனை
5-55 போதிமாதவனின் போதனைகள்
6-00 வர்த்தகசேவை
6-30 செய்திகள்
6-40 செய்தித்தாள் கண்ணோட்டம
6-50 அறிவிப்புகள்
7-00 வர்த்தகசேவை
7-30 பாடசாலைக் கூட்ட நிகழ்ச்சி
7-45 மாகாணச் செய்திகள்
7-50 வர்த்தகசேவை
8-00 வயலின் — ரி என் கிருஷ்ணன்
8-15 மெல்லிசைப்பாடல்கள்
8-30 மாதர்மஜ்லிஸ்
9-00 வர்த்தகசேவை

பகல் —

10-00 இசையமுதம
10-30 கிளாரினட் — ஏ கே சி நடராஜன்
10-45 சிறுவர் பாடல்கள்
11-00 புல்லாங்குழல் — என் ரமணி
12-00 வர்த்தகசேவை
12-45 செய்திகள்
12-55 அறிவிப்புகள்
1-00 வர்த்தகசேவை

மாலை —

6-00 செய்திகள்
6-10 அறிவிப்புகள்
6-15 அருளமுதம
6-30 மெல்லிசைப்பாடல்கள்
7-00 களத்து மேடு சஞ்சிகை நிகழ்ச்சி
7-15 நகைச்சுவை அரங்கம
7-45 வாத்திய இசை
7-50 உலகச்செய்திகள்

இரவு —

8-00 முஸ்லிம நிகழ்ச்சிகள்
9-00 செய்திகள்
9-10 அறிவிப்புகள்
9-20 பக்திப்பாடல்கள்
9-30 தலைப்பூங்கா — நடத்துபவர் — சற்சொரூபவதி
10-00 இசைக்கச்சேரி — லீலாவதி ரட்ணசிங்கம
10-45 பஜன் — எஸ் ஜானகி
11-00 ஒலிபரப்பு முடிவு.

கண்ணோட்டம
6-50 அறிவிப்புகள்
7-00 வர்த்தகசேவை நிகழ்ச்சி
7-30 பாடசாலைக் கூட்ட
7-45 மாகாணச் செய்திகள்
7-50 வர்த்தகசேவை
8-00 லயவிந்யாசம கே கே அச்சுதன்
8-15 மெல்லிசைப்பாடல்கள்
8-30 சுவாரா மலாயூ மலாய் மஞ்சரி அல்ஹாஜ் டி. டி ஸல்டீன்
9-00 வர்த்தகசேவை

பகல் —

10-00 இசையமுதம
10-30 தவில் கச்சேரி — வலயப்பட்டி சுப்ரமணியம
10-45 பக்திப் பாடல்கள்
11-00 வயலின் — லால்குடி ஜெயராமன் — ஸ்ரீமதி
12-00 வர்த்தகசேவை
12-45 செய்திகள்
12-55 அறிவிப்புகள்
1-00 வர்த்தகசேவை

மாலை —

6-00 செய்திகள்
6-10 அறிவிப்புகள்
6-15 இந்த சமயப் பேச்சு— கீதை காட்டும இலட்சிய மனிதன் — தமிழ்ன்பம கணபதிப்பிள்ளை
6-30 வளரும பயிர் நடத்துபவர்— வனஜா ஸ்ரீநிவாசன்
6-45 பாவளம — தொகுப்பு சில்லையூர் செல்வராஜன்
7-00 கிராம சஞ்சிகை வி ஏ சிவஞானம
7-30 மெல்லிசைப் பாடல்கள்
7-50 உலகச்செய்திகள்

இரவு —

8-00 தர்ஜமதுல்குர்ஆன்
8-05 திருக்குர்ஆன் விளக்கம நிகழ்த்துபவர்— மௌலவி எம ஏ சாஹுல் ஹமீத்
8-20 கிராஅத்
8-25 முஸ்லிம செய்திகள்
8-30 மணிமொழிகள் வழங்குபவர் — மௌலவியா ஜலீலா சபீக்
8-40 தத்சவ வித்துக்கள் தொடர். பேச்சு வழங்கு

## டெலிவிஷன்

### ரூபவாஹினி

23—5—1990

4-30 பி ப மனிதரும இயந்திரங்களும
5-00 செய்திகள் —
5-15 கருத்துப் படம
5-30 இளையர் அரங்கம
6-00 முமமணிகளுக்கு அஞ்சலி
6-15 உரை நிகழ்ச்சி
6-30 செய்திகளும காலநிலை அறிக்கையும — தமிழ்
7-00 தின பொதின்
7-30 சங்கீத நிகழ்ச்சி
8-00 செய்திகளும காலநிலை அறிக்கைகளும — சிங்களம
8-30 உலக உதைபந்து கிண்ணம
9-00 த ஹனிமூனர்ஸ்
9-30 செய்திகளும காலநிலை அறிக்கையும ஆங்கிலம
10-00 த ருவை லைற் சோண்
10-50 ஒளிபரப்பு முடிவு

### ஐ. டி. என்.

5-59 பி ப நிகழ்ச்சி நிரல்
6-00 முமமணிகளுக்கு அஞ்சலி
6-15 கொக்ஸி ஷெல்பே
6-30 செய்திகள் — சிங்களம
6-45 சித்திர கீத
7-30 சில்ட்றன் ஒஃப் த டோக் ஸ்டார்
8-00 பேபியும கொமபனியும
8-30 வெறயிற்றி வெறயிற்றி
8-55 கோப்பி கடே
9-30 மிஷன் இமபொசிபிள்
10-00 செய்திகள் ஆங்கிலம
10-25 நிகழ்ச்சி நிரல்
10-26 மிஷன் இமபொசிபள் தொடர்
10-45 ஒளிபரப்பு முடிவு

# தினபதி

வார இதழ் "சிந்தாமணி" ஞாயிறுதோறும் வெளிவரும்


கொழும்பு, காலி, காங்கேசன்துறை, திருகோணமலை

# 4 துறைமுகங்களும் நவீனமயமாகும்

## அமைச்சர் ரூபா கருணாதிலக்க தகவல்

கொழும்பு, மே 22

கொழும்பு, காலி, காங்கேசன்துறை, திருகோணமலை ஆகிய 4 துறைமுகங்களும் எதுவித பாரபட்சமுமின்றி விஸ்தரிக்கப்பட்டு நவீனமயமாக்கப்படும்.

வர்த்தகக் கப்பற்றுறை அமைச்சர் திரு ரூபா கருணாதிலக்க இவ்வாறு கூறினார்.

கொழும்புத் துறைமுக அதிகார சபை அலுவலகத்தில் நேற்று முன்தினம நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் கொழும்பு துறைமுகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும அபிவிருத்தி வேலைகள் பற்றி அமைச்சர் எடுத்துரைத்தார்—

துறைமுகத்தின் 3ஆம, 4ஆம தளங்களிலும் விரைவில் வேலைகள் ஆரம்பமாகும.

ஜப்பான் உதவியுடன் 40 கோடி ரூபா செலவில் இந்த வேலைகள் மேற்கொள்ளப்படும. தேசிய வீடமைப்பு அமைச்சின் ஒத்துழைப்புடன் துறைமுக தொழிலாளர்கள் 600 பேருக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும.

கொழும்பு துறைமுகத்திலிருந்து விக்டோரியா பாலம வரையில் கொள்கலன்களைக் கொண்டு போகக் கூடிய விதத்தில் 1.8 கிலோ மீட்டர் தூரத்திற்கு பாதை அமைக்கப்படும.

26 கோடியே 80 லட்சம ரூபா செலவில் எலிசபெத் இறங்குதுறை சமப்படுத்தப்படும.

மூன்றாவது இறங்குதுறை 9 கோடியே 30 லட்சம அமெரிக்க டாலர் செலவில் சீரமைக்கப்படும. இதன் நீளம 380 மீட்டர்களாக இருக்கும.

முதலாம, இரண்டாம இறங்கு மேடைகளின் நீளம 700 மீட்டர்களாகும.

காலி துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய ஜனாதிபதி விருப்பம தொண்டுள்ளார்.

அபிவிருத்தி வேலைகள் முடிந்ததும அங்கும கொள்கலன்களை வைக்கக் கூடியதாக இருக்கும.

இதுவிஷயமாக ஜப்பானுடன் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

நிபுணர்கள் குழு அடுத்தமாத முதல் வாரத்தில் கொழும்பு வர இருக்கிறது. அவர்கள் துறைமுகத்தை பார்வையிட்டு அடுத்த வருடம மார்ச் மாதத்திற்குள் அறிக்கை சமர்ப்பிப்பார்கள்.

திருமலை காங்கேசன்துறை துறைமுகங்களிலும தற்போது வேலைகள் நடைபெற்று வருகின்றன.

காங்கேசன்துறையில் சிமெந்தும, திருகோணமலையில் மாவும ஏற்றப்படுகின்றன.

திருகோணமலையில் தனித்தனி கூட்டங்களாக செயற்பட்டு வந்த தமிழ், சிங்கள, முஸ்லிம தொழிலாளர்கள் கடந்த நவம்பர் மாதத்திலிருந்து ஒன்றாக வேலை பார்த்து வருகிறார்கள்.

போதிய நிதி கிடைத்ததும காங்கேசன்துறை, திருகோணமலை துறைமுகங்களும அபிவிருத்தி செய்யப்படும.

அத்தியாவசிய பொருட்களை பெருந்தொகையாக கொண்டு வந்து இங்கு பாக்கெட் செய்வது தொடர்பாக வாழ்க்கைச் செலவைக் குறைப்பது தொடர்பாக நியமிக்கப்பட்ட கமிட்டி பரிசீலித்து வருகிறது.

இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

(ல—கு)

# யாழ். ரயில்களில் மதுபான விற்பனை

## உடன் நிறுத்த கோரிக்கை

கொழும்பு, மே 22

யாழ் ரயில்களில் மதுபானம விற்பனை செய்வது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும—

யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திரு கே நவரத்தினம இப்படி கோரிக்கை விடுத்துள்ளார்—

போக்குவரத்து நெடுஞ்சாலை அமைச்சர் திரு விஜேபால மெண்டிஸுக்கு திரு நவரத்தினம எழுதியிருக்கும கடிதம ஒன்றிலேயே இக்கோரிக்கையை அவர் விடுத்திருக்கிறார்—

கொழும்புக்கும, காங்கேசன் துறைக்கும இடையில் சேவையில் ஈடுபட்டிருக்கும ரயில்களில் மதுபானம விற்பனை செய்யப்படுகிறது—

பெண்களும, முதியோர்களுமே மிக மோசமாக பாதிக்கப்படுகிறார்கள்—

இந்த அவல நிலையில் பயணிகள் குடிகாரர்களின் பிரச்சினைகளுக்கும முகம கொடுக்க வேண்டியதாக இருக்கிறது— இது தொடர்பாக பல முறைப்பாடுகள் பொதுமக்களிடமிருந்தும கிடைத்துள்ளன—

இதனால் பயணிகள் தனியார் பஸ்களிலும, வாகனங்களிலுமே பயணம செய்ய விழைவர்— அரசு இதன் மூலம பெரும வருவாயை இழக்க வேண்டி வரும—

எனவே இந்த மதுபானம விற்பனை செய்வதை நிறுத்துவதற்கு உரிய பணிப்புரைகளை விடுத்தால் நன்றி உடையவனாக இருப்பேன்—

இப்படி திரு நவரத்தினம தமது கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்—

யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ரயில்களில் மது

9 பேரை பலி கொண்ட விபத்து:

# ரூ. 18 ஆயிரம் நஷ்டஈடு

## வழங்க சாரதிக்கு உத்தரவு

கொழும்பு, மே 22

ஒன்பது பேரை பலிகொண்ட கிரிபத்கொடை பயங்கர வாகன விபத்து தொடர்பாக பஸ் சாரதியை 18 ஆயிரம ரூபா நஷ்டஈடு செலுத்துமாறு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிவான் திரு சீ வி விக்னேஸ்வரன் நேற்று முன்தினம உத்தரவிட்டார்—

கவனயீனமாக பஸ்ஸை செலுத்தியதால் ஒன்பது பேர் மரணமாயினர். இந்த ஒன்பது பேரின் மரணங்களும கைமோசக் கொலை என்பதை பிரதிவாதி ஏற்றுக் கொண்டார்.

இதனால் ஒரு குற்றச்சாட்டுக்கு இரு வருடங்கள் வீதம ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 18 வருட சிறைத்தண்டனையும விதிக்கப்பட்டது.

மொகமட் மூசின் மொகமட் அல்லது நிலாபர் என்பவருக்கே இந்தத் தண்டனை விதிக்கப்பட்டது.

1985ஆம ஆண்டு ஜனவரி மாதம 7ஆம திகதியன்று கிரிபத்கொடை 13ஆம, 14ஆம கிலோ மீட்டர் கல்லுக்கருகில் இடம பெற்ற இந்த விபத்தில் 9 பேர் கொல்லப்பட்டனர்.

இந்த ஒன்பது பேரின் மரணம தொடர்பாகவே பிரதிவாதிக்கெதிராக வழக்கு தொடரப்பட்டது.

பிரதிவாதிக்கு விதிக்கப்பட்ட நஷ்டஈட்டு தொகை செலுத்தப்பட்டதும, அது இறந்தவர்களின் உறவினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படும என்றும நீதிவான் தெரிவித்தார்.

(ல—வ)

உள்ளூராட்சித் தேர்தல்களுக்குப் பின்

# தமிழ் கலைஞரை ஒன்றிணைக்கும

## வேலைத் திட்டம

கொழும்பு, மே 22

உள்ளூராட்சித் தேர்தல்களின் பின் தமிழ் கலைஞர்களை ஒன்றிணைக்கக் கூடிய வேலைத் திட்டம ஒன்று நடைமுறைப்படுத்தப்படும.

நீர்வழங்கல், வடிகால் அமைப்புச் சபையின் பிரதித் தலைவரும, சுச்சரித்த இயக்கத்தின் செயலாளருமான திரு ரத்னசிறி ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த ஞாயிறு மாலை ஸ்ரீலங்கா தேசிய கலைஞர் பேரவையின் அங்குரார்ப்பணக் கூட்டம ஒன்று மருதானை "சரஸவிபாய" மண்டபத்தில் நடைபெற்றது. பிரமம ஸ்ரீ பா சண்முகரத்தின சர்மா குத்துவிளக்கேற்றி கூட்டத்தை ஆரமபித்து வைத்தார்.

இக்கூட்டத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் ரத்னசிறி ராஜபக்ஷ மேலும கூறியதாவது—

தமிழ் கலைஞர்களை ஒன்றிணைக்கக் கூடிய வகையில் வேலைத் திட்டம ஒன்றை தயாரிக்க வேண்டும என்பதை எமது ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாச விடம நான் சில நாட்களுக்கு முன்பு முன் வைத்தேன்.

உள்ளூராட்சித் தேர்தல்கள் முடிவுற்றதும இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அவர் உறுதி அளித்தார்.

தமிழ் கலைஞர்கள் பல பிரிவுகளாக சிறு குழுக்களாக பிரிந்து இருப்பது வேதனைக்குரியதே. எல்லோரும ஒருமித்து பகைமை உணர்வுகளை மறந்து கலைக்காகவும, கலை வளர்ச்சிக்காகவும உழைக்க வேண்டும.

ஒரு அமைப்பின் கீழ் இருந்தால் உங்களது உரிமைகளை கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம. இது மிகவும எளிதான காரியம, ஏனெனில் கலை உணர்வு கொண்ட எழுத்தாளர், கவிஞர் எமது ஜனாதிபதி.

கலைஞர்களின் தேவைகளை நன்குணர்ந்தவர் அவர். தமிழ் கலைஞர்களின் நன்மைக்காக முருகன் படமாளிகையை நவீன அரங்காக மாற்றியமைக்கும திட்டமும அவர் முன் கொண்டு வரப்பட்டுள்ளது.

தமிழர்களின் கலை இலக்கியங்கள் தான் உலகத்திலேயே அதிகமாக காணப்படுகின்றன. நூல்கள் கூட அதிகமாக வெளிவருகின்றன. ஆனால் இலங்கையில் வளர்ச்சி அடையவில்லை.

தமிழ் சினிமா, நாடகம போன்றவை சமீபத்தில் வந்ததாக ஞாபகம இல்லை. இது பெரும குறைபாடு. இதற்கு முக்கியமான ஏற்பாடாக கலைஞர்கள் அனைவரும ஒன்றிணைக்கப்பட வேண்டும.

இவ்வாறு திரு ரத்னசிறி ராஜபக்ஷ கூறினார்.

பேரவையின் தேசிய அமைப்பாளர் ஜனாப் ஜே கே நஜிமுதீன், அகில இலங்கை அருந்ததியர் (ஹரிஜன) சங்கத் தலைவர் திரு என் கே சிவஞானம, "நெய்னகே கூ துவ" இயக்குநர் திரு தயா வைமன் ஆகியோர் கூட்டத்தில் உரையாற்றினர். (ல—மூ)

தாயகம் திரும்புவோர் பிரச்சினை:

# ஜனாதிபதி—இந். பிரதமர் சந்தித்துப் பேசுவர்

## ரஞ்சன் கூறியதாக அறிக்கை

கொழும்பு, மே 22

இந்திய பிரஜாவுரிமை பெற்றிருக்கும தோட்டத் தொழிலாளர் சமபந்தமாக ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாசவும, இந்தியப் பிரதமர் திரு சிங்கும பேச்சுவார்த்தை நடத்துவர்.

அதுவரையும இமமக்கள் தொடர்பாக எவ்வித துரித நடவடிக்கையும எடுக்கப்படமாட்டாது—

தோட்டத் தொழில்துறை அமைச்சரும, பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான திரு ரஞ்சன் விஜேரத்ன இப்படிக் கூறினார்.

அமைச்சருடன் அமைச்சின் செயலாளரும, அரச தோட்டக் கூட்டுத்தாபன நிர்வாக இயக்குநரும, மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை நிர்வாக இயக்குனரும கலந்து கொண்டனர்.

கணேசன், நிதிச் செயலாளர் ஜனாப் அஷ்ரப் அஸீஸ், உப தலைவர் திரு ஏ சாமிமுத்து, உதவிச் செயலாளர்கள் திருவாளர்கள் எம தர்மலிங்கம, ஏ எஸ் குழந்தைவேல், நிர்வாகச் செயலாளர் திரு ஆர் ஏ இராசையா ஆகியோர் கலந்து கொண்டனர்.

(ல—ங)


## வேலை வாய்ப்புக்கள்

I பாஹ்றெயின் (Bahrain)

பாஹ்றெயின் டினார் இலங்கை ரூபா

கொழும்புக்கும், காங்கேசன் துறைக்கும் இடையில் சேவையில் ஈடுபட்டிருக்கும் ரயில்களில் மதுபானம் விற்பனை செய்யப்படுகிறது.

யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ரயில்களில் மதுபானம் விற்பனை செய்வதை நிறுத்த வேண்டும் என அரசிடம் கோரிக்கை விடுத்ததைத் தொடர்ந்து 1983 இல் மதுபானம் விற்பனை செய்வது நிறுத்தப்பட்டது.

மீண்டும் இப்பொழுது மதுபானம் விற்பனை செய்யப்படுகிறது. மது மயக்கத்தில் இருக்கும் பயணிகள் அடிக்கடி அசிங்கமான கேவலமான நடவடிக்கைகளில் ஈடுபடும் சம்பவங்கள் இடம் பெறுகின்றன.

மதுபான விற்பனை தடை செய்யப்பட்ட காலகட்டத்தில் பயணிகள் தொல்லைகள் எதுவுமின்றி பயணத்தை மேற்கொள்ளக் கூடியதாக இருந்தது.

யாழ் ரயிலில் பயணிகள் மிகவும் நெருக்கமாகவும், நின்று கொண்டும் பயணம் செய்வதைத் தாங்கள் அறிவீர்கள். இதனால்

## பாதை விலகி கார் விபத்து

கொழும்பு, மே 22

நோயாளி ஒருவரை ஏற்றிக் கொண்டு ஆஸ்பத்திரி நோக்கிச் சென்ற கார் ஒன்று பாதை விலகி ஆற்றில் விழுந்தது. ஆற்றில் விழுந்தோரில் ஐந்து பேர் நீந்திக் கரை சேர்ந்தனர். இவர்கள் தம்முடன் கொண்டு சென்ற ஒரு மாதம் நிரம்பிய குழந்தையைக் காணவில்லை.

இதேவேளை காரில் பயணம் செய்த தாய் ஒருவரும் 8 மாதம் நிரம்பிய குழந்தையும் வீதியில் தூக்கி எறியப்பட்டனர்.

இந்தச் சம்பவம் அக்குரஸ்ஸை மாக்கந்துர எனும் இடத்தில் நிகழ்ந்தது.

(ண-ர)

இழக்க வேண்டி வரும்.

எனவே இந்த மதுபான விற்பனை செய்வதை நிறுத்துவதற்கு உரிய பணிப்புரைகளை விடுத்தால் நன்றி உடையவனாக இருப்பேன்.

இப்படி திரு நவரத்தினம் தமது கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

இது சம்பந்தமாக திரு நவரத்தினம் நாடாளுமன்றத்தில் வாய்மூல வினா எழுப்ப இருக்கிறார்.

(ல-ந)

## மூதூர் பாலம் சேதம்

மூதூர், மே 21

அண்மையில் மூதூர் பகுதியில் வீசிய பெருங்காற்றினால் கடல் கொந்தளிப்பு ஏற்பட்டது. இதனால் மூதூர் இறங்குதுறைப் பாலம் கடல் அலைகளின் தாக்குதல்களுக்குள்ளாகி சேதமடைந்துள்ளது.

இப் பாலத்தில் தண்டவாளங்களில் பொருத்தப்பட்டிருந்த சிலிப்பர் கட்டைகள் கடலினுள் வீழ்ந்துள்ளன.

அங்கும் இங்கும் சிதறிக் கிடந்த சிலிப்பர் கட்டைகளை மூதூர் இறங்குதுறையில் ஏற்றி இறக்கும் வேலையில் ஈடுபட்டுள்ள கூலியாட்கள் கண்டெடுத்து மூதூர் இறங்குதுறைப் பாலத்தில் தற்காலிகமாக இணைத்துள்ளனர்.

இவை உறுதியான நிலையில் சீரான முறையில் தண்டவாளங்களில் இணைக்கப்படாததனால் பயணிகள் மிகவும் அவதானமாக இங்கு இணைக்கப்பட்டுள்ள சிலிப்பர் கட்டைகளில் நடந்து செல்ல வேண்டியுள்ளது. இதனால் வயோதிபர்களும் பெண்களும் மிகவும் சிரமப்படுகின்றனர்.

மூதூர் திருகோணமலை மோட்டார் படகுச் சேவை பயணிகளும் இதனால் பெரும் அவஸ்தைப்படுகின்றனர்.

(இ-401)

மட்டங்களாக இருக்கும்.

முதலாம், இரண்டாம் இறங்கு மேடைகளின் நீளம் 700 மீட்டர்களாகும்.

காலி துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய ஜனாதிபதி விருப்பம் கொண்டுள்ளார்.

வைக் குறைப்பது தொடர்பாக நியமிக்கப்பட்ட கமிட்டி பரிசீலித்து வருகிறது.

இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

(ல-கூ)

# கொழும்பு மாவட்ட மாணவருக்கிடையே தேவார பாராயணப் போட்டி

கொழும்பு, மே 22

கொழும்பு மாவட்டத்தில் உள்ள மாணவர்களுக்கிடையே தேவார மனனப் போட்டி ஒன்று நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் ஜூலை 15 ஆம் திகதி இப்போட்டி நடத்தப்படும்.

நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனம், கொழும்பு இந்து கலாசார மன்றத்தின் அனுசரணையுடன் இதனை ஏற்பாடு செய்துள்ளது.

விண்ணப்பதாரிகள் எதிர்வரும் ஜூலை 15 ஆம் திகதிக்குள்ளான காலப்பகுதியில் 18 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்கள் எதிர்வரும் ஜூன் 15 ஆம் திகதி வரை மாத்திரமே ஏற்றுக் கொள்ளப்படும்.

போட்டி நடைபெறும் இடம் திகதி என்பன விண்ணப்பதாரர்களுக்கு பின்னர் அறிவிக்கப்படும்.

திருநீற்றுப்பதிகம், பஞ்சாட்சரப் பதிகம், நமச்சிவாயப் பதிகம், கோளறு பதிகம் திருநீலகண்டப் பதிகம், பொற்கிழி பெற்ற பதிகம் திருகேதீச்சரப் பதிகம்.

மறுமாற்றத் திருத்தாண்டகம், சுந்தரமூர்த்தி நாயனாரின் நமச்சிவாயப் பதிகம் என்பனவற்றுக்கிடையே மனனப் போட்டி நடத்தப்படும்.

முன்னைய வருடங்களில் நடைபெற்ற போட்டிகளில் பரிசு பெற்றோர் ஆதீனம் குறிப்பிடும் வேறு பதிகங்களை மனனம் செய்ய வேண்டும்.

(ல-ர)

## விஸா அதிகாரிகள் மே 25 இல் விஜயம்

கொழும்பு, மே 22

இம்முறை மக்கா செல்லும் ஹஜ் யாத்திரிகர்களுக்கு விஸா வழங்குவதற்காக சவூதி அரேபியாவில் இருந்து இரண்டு விஸா அதிகாரிகள் மே 25 ஆம் திகதியன்று இலங்கை வருவர்.

ஹஜ் யாத்திரை மேற்கொள்ளும் சகலரும் தத்தம் பிரயாண முகவர்கள் மூலமாக இந்த விஸாக்களைப் பெற்றுக் கொள்ளலாமென முஸ்லிம் சமய, கலாசார விவகாரத் திணைக்களம் கேட்டுள்ளது.

(ல-007)

வடிக்கையும் எடுக்கப்படமாட்டாது.

தோட்டத் தொழில்துறை அமைச்சரும், பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான திரு ரஞ்சன் விஜேரத்ன இப்படிக் கூறினார்.

நேற்று முன்தினம் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் தூதுக்குழு ஒன்று அமைச்சரை அவரது அமைச்சில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியது.

இச்சந்திப்பின் போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

இந்திய பிரஜாவுரிமை பெற்றுள்ள தொழிலாளர்கள் அவர்களின் பெற்றோர்கள் 35 வருடங்களுக்கு முன்னதாக செய்த தவறான முடிவினால், இன்று பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அவர்களை இந்தியாவுக்கு அனுப்புவது குறித்து மறுபரிசீலனை செய்ய வேண்டும் என ஜ தொ கா தூதுக்குழு அமைச்சரைக் கேட்டுக் கொண்டது.

"இது ஒரு ஒப்பந்தத்தின் அமுலாக்கமாகும். இதனை நான் இப்போது பிரஸ்தாபிப்பதற்கு காரணம் இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவு எடுக்க வேண்டும். இந்தியா திரும்பக் கூடியவர்களுக்கு பல சலுகைகளை அரசாங்கம் அளிக்க நினைத்துள்ளது.

அதோடு விரைவில் நமது ஜனாதிபதியும், இந்தியப் பிரதமரும் இது சம்பந்தமாகப் பேசி ஒரு முடிவெடுப்பர். அதுவரை எவ்வித துரித நடவடிக்கையும் எடுக்கப்பட மாட்டாது" என்று அமைச்சர் கூறினார்.

இப்பிரச்சினையை மனிதாபிமான அடிப்படையில் தீர்க்க இலங்கை அரசு முன்வர வேண்டுமென ஜ தொ கா தூதுக்குழு கேட்டுக் கொண்டது.

ஜ தொ கா பொதுச் செயலாளர் வி பி கணேசன் நேற்று முன்தினம் பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையில் இப்படிக் குறிப்பிட்டிருக்கிறார்.

ஜ தொ கா தூதுக்குழுவில் பொதுச் செயலாளர் திரு வி பி

இப்பத்திரிகையை அச்சிட்டு வெளியிட்டது இன்டிபென்டன்ட் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் 5 குணசேன மாவத்தை கொழும்பு 2. இலங்கை தபால் பெட்டி இல 1613 வெளியிட்ட திகதி 23 மே 1990

DINAPATHI, 5, Gunasena Mawatha, Colombo — 12
P.O, Box 1613.

## வேலை வாய்ப்புக்கள்

### I பாஹ்றெயின் (Bahrain)

| | பாஹ்றெயின் டினார் | இலங்கை ரூபா |
|---|---|---|
| 1 மெக்கானிக் (டீசல், பெற்றோல்) Machanic (Diesel & Petrol) | 80—100 | 8000/—10,000/- |
| 2 ரிங்கர் (Tinker) | 80—100 | 8000/—10,000/- |
| 3 பிளம்பர் (Plumber) | | |
| 4 ஓட்டோ எலெக்ரிசியன் (Auto Electrician) | 80—100 | 8000/—1,000/- |
| 5 கார் வெல்டர் (Car Welder) | 80—100 | 8000/—10,000/- |
| 6 ஓட்டோ மெக்கானிக் (Auto Mechanic) | 80—100 | 8000/—10,000/- |
| 7 லேத் மென் (Lathemen) | 80—100 | 8000/—10,000/- |
| 8 யூக்கி மெசின் இயக்குனர்கள் (Juki Machine Operators) | 70—90 | 7000/—9000/- |

### 11 றியாட் Riyadh (KSA)

| | சவூதி றியால் | இலங்கை ரூபா |
|---|---|---|
| 1 றெயிலர் டிரைவர் (Trailor Driver) | 700 ச றி | 7000/- |

* இரண்டு வருட ஒப்பந்தம்
* உணவு தங்குமிட வசதி இலவசம்
* மேலதிக விபரங்களுக்கு பாஸ்போட், பாஸ்போட் அளவுப் படம் 6, தகுதி சான்றிதழ்கள் சகிதம் நேரில் வரவும்.

### 111 வீட்டுப் பணிப் பெண்கள் (Housemaids)

சிங்கப்பூர்-ஓமான், சவூதி அரேபியா-குவைத், டுபாய் பாஹ்றெயின் ஆகிய நாடுகளுக்கு

* பாஸ்போட், பாஸ்போட் அளவு படம் 6, முழு அளவு கலர் படம் 2 இவைகளுடன் நேரில் வரவும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி-

**HORIZON ENTERPRISES**

No 9, 19th Lane, Kollupitiya
Colombo — 3

(டைனிஸ் லோட்டஸ் ஹோட்டல் முன்பாக கடற்கரைப் பக்கம் செல்லும் லேன்)

* லேபர் லைசன்ஸ் இலக்கம்- 609
* அனுமதிப் பத்திர இலக்கம்- ஏ எல்/609/13/90, ஏ எல்/609/14/90

நாட்டின் சகல பாகங்களுக்கும் சப் ஏஜண்டுகள் தேவை

* சப் ஏஜன்டுகளுக்கு முன் உரிமை வழங்கப்படும்.